உ

சிவமயம்

# சைவநீதி

# SAIVANEETHI

| மலர் 9 | பார்த்திப - மாசி | February to March 2006 | இதழ் 11 |
|---|---|---|---|





உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

-திருவாசகம் -

உ

# பொருளடக்கம்


பக்கம்

1. சயந்தன் கனவு ஒன்று கண்டான் ........ 3
2. உருவ வழிபாடு தத்துவம் ........ 6
3. கால சம்ஹார மூர்த்தி ........ 8
4.. இலிங்கோற்பவ மூர்த்தம் ........ 10
5. திருவாரூர் நான் மணிமாலை ........ 13
6. சுந்தரர் தமிழுக்காகத் தூது சென்றான் சோமசுந்தரன் ........ 17
7. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் ........ 21
8. சைவ வாழ்க்கை ........ 23
9. உமேசர் ........ 24
10. நைவேத்திய விதி பரிசாரக லஷணம் ........ 25


மணியே மணியின் ஒளியே
ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ
கேஅனு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே.

-அபிராமி அந்தாதி-

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்

உ

சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி

SAIVANEETHY

# சைவநீதி



மலர் 9 பார்த்திப - மாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 11

தொடக்குனர்:

கலாபூஷணம், ஞானசிரோமணி, சைவப்புலவர்மணி, வித்துவான், திரு. வ. செல்லையா

மதியுரைஞர்:

சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. D.M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
*Chairman U.P.S.*

திரு. கு. மகாலிங்கம்

பதிப்பாசிரியர்:

திரு. வே. திருநீலகண்டன்
லக்ஷ்மி அச்சகம்

விநியோகம்:

திரு. க. சீனிவாசகம்
ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:

திரு. செ. நவநீதகுமார்
30, ரம்யா றோட், கொழும்பு - 04.

தொடர்புகட்கு : *7.30 p.m. to 7.30 a.m.*
தொலைபேசி : 2580458, 07779008286

# திருமுறையின் பெருமை

சிவபெருமான் அருள் பெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலான உண்மை நாயன்மாராற் செய்யப்பட்ட தேவாரம் முதல் திருத்தொண்டர் புராணம் வரையுள்ள திருப்பாடல்கள் திருமுறை எனப்படும்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம் முதலிய நாற்பது பிரபந்தங்கள் இவை பதினொரு திருமுறைகளாம். மந்திரங்கள் பதினொன்று ஆதலால் நம்பியாண்டார் நம்பியினாற் திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப்பட்டன. திருத்தொண்டர் புராணம் அனபாய சோழன்காலத்தில் பன்னிரண்டாந் திருமுறையாக வகுக்கப்பட்டது.

திருமுறைகளை அம்முறைக் கிரமமின்றி மாறி ஓதுதல் குற்றமாகும். திருமுறைகளை ஓதுபவர்கள் மது, மாமிசம், உண்ணாதவராய் சைவாசாரமுடையவராய், சிவதீட்சை பெற்றவராய், விபூதி உருத்திராட்ச தாரணமுடையவராய் இருத்தல் வேண்டும்.

பண்வழி பாடாது தான் நினைத்தபடி பாடுவோர், சிவதீட்சை இல்லாதவர், சிவசின்னம் அணியாதவர், சிவநிந்தகர், திருமுறைகளை ஓதும்போது அதற்கு முன்னும் பின்னும் இடையிலும் வேறு பாடல்களைப் பாடுவோர் என்னும் இவர்கள் திருமுறைகளைத் தீண்டத் தகுதியற்றவர்.

திருமுறைகளைப் பூசித்தவர் சிவபெருமான் விநாயகர் சமயாசாரியார் முதலியோரைப் பூசித்தவராவர். திருமுறைகளுக்குப் பூசையும் விழாவும் செய்தல் கோடி சிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமனாகும். திருமுறைகளை ஏற்றிப் போற்றின் உலகிற் துன்பமில்லை. சிவயோகப் பேறும் கிடைக்கும்.

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 9

## வெப்பத்தினால் உண்டாகும் நோய்களான ஜுரம், அம்மை முதலியன நீக்கும் பதிகம்

**இப்பதிகம் 'திருநீற்றுப் பதிகம்' எனப்படும் அனைவராலும் ஓதப்படும் திருப்பதிகமாகும். சம்பந்தர் மதுரையில் ஓர் மடத்தில் அடியார்களுடன் தங்கி இருக்கின்றார். இதையறிந்த சமணர்கள், அம்மடத்திற்கு தீ வைத்தார்கள். இத்தியை பையவே சென்று பாண்டியற்கு ஆகுக என்று சம்பந்தர் ஆணையிட்டார். அத் தீ பாண்டியனிடத்து வெப்பு நோயாகியது கூன் பாண்டியன் தீராத வெப்பு நோயால் வருந்தினான். இந்நோயைத் தீர்க்க எவ்வளவு முயன்றும் சமணர்களால் இயலவில்லை. பின்னர் சம்பந்தப் பெருமான் இப்பதிகத்தை ஓதி திருநீறு அளித்தார். பாண்டிய மன்னனும் நோய் நீங்கி பேரின்பம் பெற்றான். அன்பர்கள் திருநீறு உடம்பில் அணியும்பொழுது இப்பதிகத்தை ஓதி அணிய வேண்டும். எல்லாவிதமான நோய்க்கும், தீங்கிற்கும், இந்த பதிகத்தை ஓதி திருநீறு அணிந்தால், தவறாமல் பயன் அடையலாம். பயம், தீயகனவுகள், உடல் நலிவு போன்ற எல்லாவற்றிற்கும் இப்பதிகம் நல்ல பலனைத் தரும் என்பதில் ஐயமில்லை.**

**திருச்சிற்றம்பலம்**

**திருவவாலவாய்** **பண்: காந்தாரம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.
1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.
2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.
3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.
4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.
5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.
6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே.
7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே.
8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே.
9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே.
10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.
11

**திருச்சிற்றம்பலம்**

# சயந்தன் கனவு ஒன்று கண்டான்

சிவ: சண்முகவடிவேல்

வீரமகேந்திர புரத்துள்ள சிறைச்சாலையில் சயந்தனும் தேவர்களும் மயங்கி வீழ்ந்தார்கள். அவுண காவலாளர்களின் ஆய்க்கினையும், ஆற்றொணாத துயரின் ஆழமும், நூற்றியெட்டு யுகச் சிறை வாசமும் அவர்கள் மயங்கி வீழ்வதற்குக் காரணமாகும். பெருமை மிக்க குமரேசனாம் சண்முகப் பெருமான் தேவர்களும் தேவேந்திரன் மைந்தனாம் சயந்தனும் மயங்கி மாழ்குவதைத் திருவுளங் கொண்டார். அளவில்லாத ஆன்மாக்கள் தோறும் வியாபித்து நின்று கருணையைப் பாலிப்பவர் கந்தவேள் கடவுளாதலின் கண்டு உள்ளங் கனிந்தார்.

சயந்தனும் தேவர்களும் அசுரர்களுடைய கொடிய சிறையில் அகப்பட்டார்கள். அசுரர்க ளுடைய தண்டனையால் நிலை தளர்ந்தார்கள். அடைக்கலம் ஆவாரில்லாமல் தனித்து அழுகின்ற குழந்தையை அஞ்சாதே என்று அரவணைக்கும் பெற்ற தாயினும் பெருந் தயவு காட்டும் ஆறுமுகப் பிரான் அறிவு இழந்த அமரர்களுக்குக் கருணை புரியத் திருவுளங் கொண்டார்.

இமையவர்கள் தாமாகத் தேடிக் கொண்ட தீவினையால் ஏற்பட்ட இன்னல்களை நீக்கக் குழந்தை வடிவேலன் திருச்செந்திப் பதியில் எழுந்தருளி இருக்கின்றார். அவ்வாறு அமர்ந்தருளும் ஆறுமுக அண்ணல் அறிவு கெட்டுப் பரவசமான சயந்தனுடைய கனவில் வெளிப்பட்டு முன்னுற வந்தருளினார்.

முன்னுற வந்த முருகவேள் பெருமான், சிறந்த கொடி, வச்சிராயுதம், அங்குசம், பாணம், ஒப்பில்லாத வேற்படை, அபயம் வலப்பக்கத்திலும் சிறந்த தாமரை, மணி, மழு, தண்டு, வில் இடப்பக்கத்திலும் அமைந்த ஈராறு திருக்கரமும் ஓராறு திருமுகமும் உடையவராகி சயந்தன் கனவில் காட்சி கொடுத்தருளினார்.

தமக்கு ஒரு தோற்றமில்லாத கடவுளாகிய சிவபெருமானைத் தந்தையாகவுடைய சண்முகப் பெருமான் தமது திருவடிவத்தைச் சயந்தனுக்குக் காட்டியருளினார்.

சயந்தன் தனது மனத்தில் அமைந்த சரீரத்தில் இருக்கின்ற கண்களால் கந்தக் கடவுளைக் கண்டான். கை தொழுது வணங்கினான். பின்வருமாறு பிரானாரிடத்தில் வினவினான்.

"தேவரே! அடியேன் அனுபவிக்கின்ற அல்லற்பாட்டை அறிந்து ஒல்லையில் வந்துள்ளீர்கள். என் துன்பத்தைத் தீர்த்து வைக்கச் சிந்தித்த சிந்தனையோடு சென்றுள்ளீர்கள். எனது புத்திக்கு எட்டிய வரையில் திருமால் அல்லீர். பிரமதேவர் அல்லீர், அவர்களுக்கு மேலான சிவபிரானும் அல்லீர் தாங்கள் யாவரோ?"

சயந்த குமாரனுடைய சந்தேகத்தைக் கேட்டு ஆறுமுகப் பண்ணவனார் பகருவார்.

"யாம் கொன்றை மாலை சடைக்கணிந்த சிவபெருமானுடைய மைந்தன். உன்னுடைய துன்பத்தையும் அழுகையையும் மயக்கத்தையும் மாற்றுவதற்கு வந்தோம்."

இவ்வாறு திருவாய் மலர்ந்தருளிய திருமுருகக் கடவுள் பின்னரும் உரைத்தருளுவார்

வகைஅறிந்து வல்அவை வாய்சோரார் சொல்லின்
தொகை அறிந்த தூய்மை யவர் 721

சொற்களின் தொகுதியை அறிந்த தூய மொழி நடையார் கற்றோர் கூடிய வல்அவை, அல்அவை என்னும் இருவகை அவைகளை அறிந்து, வல்அவையில் ஒன்றைச் சொல்லும் போது அச்சத்தினால் மனம் தடுமாறியும் வாய்தவறியும் வழுப்படச் சொல்ல மாட்டார்.

“உன் பிதா இந்திரன் உங்கள் குறையையும் தன் குறையையும் ஏனையவர் குறையையும் என்னிடத்தில் எடுத்து இயம்பினான். மனக் கவலை மாற்ற எம்மிடத்தில் வேண்டுதல் செய்தான். நாம் அளவற்ற சேனையோடும் இந்த பூமிக்குப் புறப்பட்டு வந்தோம். கிரவுஞ்சம் என்னும் மலையையும் தாரகாசுரனையும் அழித்தோம்.

“அதன் பின்னர் வழிநடைப் பயணத்தை மேற்கொண்டு திருச்செந்திப் பதியைச் சேர்ந்தோம். இப்பொழுது செந்தியம்பதியில் தங்கி இருக்கின்றோம். பிரம தேவரும் விட்டுணு மூர்த்தியும் உன் தந்தை இந்திரனும் இமையவர் பலரும் எம்மோடு இருக்கின்றார்கள். உன் அன்னை இந்திராணி மேரு மலையில் தங்கி உள்ளாள். நீ வருந்தாதே... வாழ்வாய்! மேலுங் கேட்பாய்.

வீரவாகுவை இன்று நாம் வீர மகேந்திர நகருக்குத் தூதாக விடுத்தோம். வீரவாகு சூரபன்மனுடைய பிள்ளைகளுள் ஒருவனையும் பல அவுண வீரர்களையும் கொன்று அழிப்பான். ஒப்பில்லாத இந்நகரத்தையும் நாசம் ஆக்குவான். வீரவாகுவை இன்று மாலைக் காலத்தில் செந்தியம்பதிக்குத் திரும்பச் செய்வோம்.

“நாம் நாளைய தினத்தில் செந்தியம் பதியிலிருந்து புறப்படுவோம். இந்நகரத்தின் பக்கலாகப், பாடி வீடு ஒன்று பண்ணுவிப்போம். நாமும் சேனையும் அதில் தங்கி இருப்போம். பத்து நாட்களில் அசுர கூட்டத்தையும் நும்மைத் துன்பக் கடலுள் ஆழ்த்திய சூரபன்மனையும் சங்கரிப்போம்.

“அவுணரை அழித்த பின்னர் உன்னைத் தேவர்களுடன் சூரபன்மன் வைத்த கொடிய சிறையை நீக்குவோம். உங்கள் செல்வங்கள் எல்லாவற்றையும் தருவோம். உன்னுடைய துன்பத்தை விடுவாய்” என்று தீவினைகள் நீங்கி உள்ளத் தெளிவு பெற்றவர்களுடைய அறிவில் அறிவாய் அமர்ந்தருளும் ஆறுமுகப்பிரான் சயந்தனுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

சயந்தன் முருகக் கடவுள் மொழிந்த வாசகங்களைக் காது கொடுத்துக் கேட்டான். அவனை ஆட்டிப் படைத்த மன மாசுக் குற்ற இருள் மாய்ந்தது. மகிழ்ச்சி குடி புகுந்தது. மனத்தில் உடல் புளகாங்கிதம் உற்றது. மயிர்க்கால்கள் கூச்செறிந்தது. மெய் சிலிர்த்தது. துண் எனக் கண்கள் ஆனந்தக் கண்ணீரை மழையாகச் சொரிந்தது. சயந்தனுடைய புயங்கள் பூரித்தன.

இந்திரகுமாரன், பெரு முயற்சியால் பெற வேண்டிய அமுதத்தை மிக இலகுவாகப் பெற்றவர்களைப் போல இறும்பூது எய்தினான். சயந்தனுக்கு உடலும் குளிர்ந்தது. தான் கற்ற வேத கீதங்களை நாதமோடு ஓதினான். ஆடினான். பாடினான். ஆனந்தக் கூத்து மாடினான். மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தான்.

விண்ணவர் கோனுக்கு மைந்தன் மெதுவாக எழுந்தான். முருகப் பெருமானுடைய திருவடித் தாமரைகளைப் பொருவில் அன்போடு போற்றி வணங்கினான். பின்னர் இந்திரகுமாரன் பின்வருமாறு எடுத்து இயம்புகின்றான்.

“வெற்றி வேல் பெருமானே! தேவரீர் தாமாகவே வந்தருளினீர்கள், மிக எளிய அடியேங்களது துன்ப துயரங்களைத் தூரறுத்தீர்கள். எம்மைக் காத்தருளினீர்கள். பெருமானைத் தஞ்சம் அடைந்தோம். சரண் புகுந்த அடியேங்களை அடைக்கலமாக ஏற்றருள்க” என்றிவ்வாறு முருகப் பெருமானிடத்தில் முறை செய்து பிரார்த்தனை பண்ணினான் சயந்தன்.

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார் 722

தாம் கற்றவைகளைக் கற்றவர் அவையில் அவர் மனத்தில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரிலும் நன்கு கற்றவராக உயர்த்திச் சொல்லப்படுவர்.

எல்லோரிலும் மேலானவரும் பரஞ்சோதி வடிவினருமான சிவகுமாரர் சயந்தனுடைய வேண்டுதலைத் திருச் செவியில் ஏற்றருளினார்.

“சயந்தகுமாரனே! அஞ்சற்க, உங்களுடைய குறைகளைத் தீர்த்தருள்வோம். நிறைவுகளைப் பெறுவீர்கள். இது நிச்சயம், மேலும் ஒன்று உரைப்போம். அதனையும் உள்ளத்தில் கொள்வாய்.

இந் நகரத்திற்கு வருமாறு யாம் விடும் தூதுவன் உன்னையும் மற்றைய தேவர்களையும் வந்து காண்பான். அவனை உங்களிடத்தில் நல்ல வார்த்தைகளை நவின்று வருமாறு யாம் ஏவுவோம். நீ அதனையும் காண்பாய்”, என்று கருணை புரிந்த கந்தக் கடவுள் சயந்தனுடைய கனவினின்றும் கரந்தருளினார்.

கந்தக் கடவுள் கனவில் நின்றுங் கரந்துழி முன்பு ஒடுங்கிக் கிடந்த சயந்தனுடைய புலன்கள் யாவும் பொறிவழி வந்து புகுந்தன. புகவே கனவு கலைந்தது. சயந்தன் படிப்படியாக சாக்கிர நிலை அடைந்தான்.

சயந்தன் விழிப்பு நிலைக்குத் தள்ளப்பட்டான். கனவில் கண்ட காட்சிகள் யாவும் சயந்தனுடைய நனவில் தோற்றியது.நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தான். எம்முடைய தீவினைகள் யாவும் இப்பொழுதே எம்மை விட்டு நீங்கினவோ! என்று மகிழ்ந்து பிரலாபித்தான்.

இது நாள் காறும் துன்பக் கடலில் முழுகிய இந்திரன் புதல்வன் கந்தன் கருணையைக் கருத்தில் உன்னி இன்பக் கடலில் தோய்ந்தான். முருகக் கடவுள் சிறைச்சாலையில் மயங்கிக் கிடக்கின்ற தேவர்கள் ஒவ்வொருவருடைய கனவிலும் விரைந்து ஏகினார். சயந்தனுக்குச் சாற்றியவாறு சகலருக்கும் கூறியருளினார். வருந்தாதீர்கள் என்று தேவர்களைத் தேற்றியருளினார். பின்னர் அவர்களுடைய கனவில் நின்றும் மறைந்தருளினார்.

சிவகுமாரர் சென்றருளுதலும் தேவர்கள் அனைவரும் கனவு கலைந்தார்கள். நனவு தன்னில் நண்ணினார்கள். விழித்து எழுந்தார்கள். கனவில் தாம் முன்பு கண்டு அறியாத காட்சியைக் குறித்து ஆராய்ந்தார்கள். கந்தன் கருணையைக் காதலித்தார்கள். களி பேருவகையில் களிப்புற்றார்கள்.

ஆனால் தாங்கள் களிப்புறுவதைக் கொடிய அவுண காவலர்கள் அறிவார்களேயானால் அல்லல் செய்வதற்கு அஞ்சமாட்டார்கள், என்று அச்சங் கொண்டார்கள்.

சயந்தனைச் சார்ந்து இருக்கின்ற சில தேவர்கள் சயந்தனுக்குக் கேட்கும் வண்ணம் தாம் கண்ட கனவை விண்டார்கள்.

அண்டர்கள் மகிழ்ச்சி கொண்டு விண்ட கனாவைக் கேட்டான். அதிசய நீரரானான். தான் கண்ட கனவிற்கு அது ஒத்திருப்பதை உணர்ந்து ஆனந்தமுற்றான்.

கருணைகூர் முகங்கள் ஆறுங் கொண்ட கந்தசுவாமிக் கடவுள் பரந்துபட்ட உலகங்கள் எங்கும் வியாபித்திருப்பதையும் அனைத்து உயிர்களுக்கும் அருளும் கருணைத் திறத்தையும் உன்னி உள்ளம் உருகினான்.

இந்திரன் மைந்தன் என்பும் இளக வேத விதிப்படி முருக மூர்த்தியினுடைய பாதார விந்தங்களைப் பரவினான். பணிந்தான். பகர ஒண்ணாத பரிமளிப்பில் பயிலுவான்.

---

**பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவைஅகத்து அஞ்சா தவர்** 723

**போர்க்களத்தில் அஞ்சாமல் புகுந்து பகைவரோடு போர் செய்து வீரத்தோடு சாகவல்லவர் உலகத்தில் பலர், ஆயினும் ஊர் அவைக்களத்தில் புகுந்து அஞ்சாமல் நின்று உரைநிகழ்த்த வல்லவர் சிலரே.**

# உருவ வழிபாடு தத்துவம்

சுவாமி சாந்தானந்தா

(சென்ற இதழின் தொடர்ச்சி......)

### நைவேத்தியம்

நைவேத்தியம் என்பது அன்றாடம் நாம் சமைத்த உணவை சிறிதளவு எடுத்து, தெய்வ விக்கிரஹத்திற்குப் படைப்பதாகும், அவ்வாறு படைத்துப் பூஜை செய்த பிறகு, அதனையே அத்தெய்வத்தின் 'அருள்' அல்லது 'பிரசாதம்' என ஏற்றுக் கொள்வதாகும். தத்வார்த்தமாகப் பார்க்கும் பொழுது

**'சந்ததமும் எனது செயல் நினது செயல் யானெனும்**
**தன்மை நினை யன்றியில்லாத்**
**தன்மையால் வேறலேன்.'**

என்ற தாயுமானவருடைய வாக்கின்படி தன்னைத்தானே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிக்கின்ற பாவனையே நைவேத்தியம் ஆகும்.

### ஹாரத்தி

ஹாரத்தி என்ற வடமொழிச் சொல்லை தமிழில் ஆரத்தி என்பார்கள். ஆரத்தி என்பது தெய்வ விக்கிரஹத்தின் முன் ஜோதி அல்லது திருவிளக்கு ஒளியால் அழகுற ஆட்டி ஆராதனை செய்வதாகும். இறைவன் அருள் ஒளி சாதகனின் உள்ளத்தை ஒளிமயமாக ஆக்குகிறது. அந்த ஒளி மயமான சாதகனது உள்ளம் இறைவனை ஒளியாக ஒளிர்விக்கிறது. இறைவன் அருளால் ஒளி மயமாக ஆக்கப்பட்ட சாதகனின் உள்ளமே கற்பூர ஆரத்தி ஆகும். ஒளிர்ந்து ஒளிர்ந்து கற்பூரத்தைப் போல அவனில் ஒன்றி, உள்ளம் ஒன்றுமில்லாமல் ஆவதே சமாதி நிலையாகும். இதுவே ஆரத்தியின் தாத்பரியமும் ஆகும்.

### நமஸ்காரம்

நமஸ்காரம் என்பது உடல், மனம், அறிவு, அகங்காரம் யாவற்றையும் தெய்வீக விருப்பத்திற்கு நாம் முழுமனதுடன் அர்ப்பணித்துக் கொள்வதே ஆகும். இருகால்கள், இரு முழங்கால்கள், நெஞ்சு, இருபுஜங்கள், நெற்றி ஆக அங்கங்களும் நிலத்தில் தொடும்படி தொழுவதையே 'சாஷ்டாங்க நமஸ்காரம்' என்பார்கள். இதனை அஷ்ட அங்க தொழுகை அல்லது வழிபாடு எனலாம். தத்வார்த்தமாகப் பார்க்கப்போனால், பஞ்சபூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று வெளி வடமொழியில் ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகியவற்றால் ஆய சரீரத்தாலும், ஆறாவதாகிய மனத்தாலும், ஏழாவதாகிய அறிவாலும், எட்டாவதாகிய அகங்காரத்தாலும் தெய்வத்திற்கு அர்ப்பணித்து வழிபடுதலே ஆகும்.

பூஜை தொடங்குமுன் பூஜைக்குரிய இடத்தை நன்கு சுத்தம் செய்து, பூஜை செய்யும் விக்கிரஹத்தையும் சுத்தமாக ஒரு பீடத்தின் மேல் நீங்கள் விரும்பும் வண்ணம் வைத்து, விளக்குகளை ஏற்றி, ஊதுவத்தி கொளுத்துங்கள். இப்போது நீங்கள் தெய்வத்தைத் தொழுவதற்கு தயாராய் விட்டீர்கள். அபிஷேகம் செய்வதற்கு உலோகத்தால் ஆன விக்கிரஹமாக இருந்தால் நல்லது. இல்லையெனில் அபிஷேகத்தை விட்டுவிட்டு, நேராக அர்ச்சனையே செய்யலாம்.

### பூஜை தொடங்குமுன் சொல்ல வேண்டிய மந்திரங்களும் அவைகளின் தாத்பரியமும்

பூஜை ஆரம்பமாவதற்கு முன்னால்

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல் 724

தாம் கற்றவைகளைத் தம்மினும் குறைவாகக் கற்றவர் அவையில் அவர் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்லி, தாம் கற்றவைகளை விட மிகுதியாகக் கற்றவரிடத்தில் அம்மிகுதியான பொருள்களை அறிந்து கொள்ள வேண்டும்.

தொடக்கத்திற்கான ஸ்தோத்திரங்களையும், தெய்வீகப் பாடல்களையும் பக்தியுடன் பாட வேண்டும். இவைகள் யாவும் பூஜை செய்யும் போது ஒரு மனத்துடன் தெய்வத்தைத் தொழுவதற்கு ஏற்ற மன நிலையை உண்டாக்குவதற்கேயாகும்.

பஞ்ச மூர்த்திகளான கணபதி, கந்தன், கிருஷ்ணன், சக்தி, சிவன் ஆகியவற்றுள், எந்த இஷ்ட மூர்த்தியை முக்கியமாக ஆராதனை செய்வதாய் இருந்தாலும் தொடக்கத்தில் கணபதி, ஸ்கந்தன், குரு, துர்க்கை, ஆகியவரின் தொடக்க மந்திரங்களைச் சொல்லிய பிறகே, முக்கிய இஷ்ட மூர்த்தியின் பூஜையைத் தொடங்க வேண்டும்.

முதன் முதலில் பாடவேண்டிய ஸ்தோத்திரம் கணபதியைப் பற்றியதாக இருக்கவேண்டும். எடுத்துக் கொண்ட யாதொரு காரியத்திற்கும் தடை ஏதும் ஏற்படாதிருக்கக் கணபதியை மனதார நினைந்து விண்ணப்பித்துக் கொள்ளு மாறு நம் தொழுகை இருக்க வேண்டும். எல்லா விக்கினங்களையும் தடைகளையும் தவிர்க்கக் கூடிய தெய்வம் கணபதியே ஆவர்.

கணபதிக்கு அடுத்து அவருக்கு இளையவரான ஸ்கந்தனை வழிபடவேண்டும். தத்துவரீதியாகப் பார்ப்போமானால் ஸ்கந்தன் சாதகனின் மனவுறுதியை மேலும் உறுதிப் படுத்துகின்ற தெய்வீக சக்தியாகும். மூத்தவர் விக்கினங்களை நீக்குகிறார்; இளையவர் மனவுறுதியை (Will) உறுதிப்படுத்துகிறார்.

அடுத்து பரம்பொருளையே குருவாகப் பாவித்து, தெய்வீக விஷயங்களில் நம்மை நாம் முழுமனதுடன் ஈடுபடுத்த அவரது அருளை வேண்டிக் கொள்கிறோம். குருவானவர் ஞானத்தை நமக்கு ஊட்டுவார்.முழுமுதற் கடவுளைக் குருவாகப் பாவித்தலன்றி, நமக்குத் தெரிந்த, கேள்விப்பட்ட எல்லா மகான்களையும் குருவாகத் தொழ வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நான்கு தெய்வ மூர்த்தங்களும் வெவ்வேறான தெய்வங்கள் அல்ல. இடையூறு அகற்றும் பொழுது, தெய்வ சக்தியை விநாயகர் என்றும், மன உறுதி பெறும் பொழுது அதே சக்தியை ஸ்கந்தன் என்றும், உள்ளம் ஒளி மயமாக ஆகும் பொழுது அதே சக்தியைக் குருவாகவும், அசுரத் தன்மைகளை அழிக்கின்ற பொழுது, அதே சக்தியைத் துர்க்கையாகவும் போற்றுகின்றோம்.

**'அவனருளாலே அவன் தாள் வணங்கி....'**
என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டது போலவும்,

**'அவன் அருளே கண்ணாகக் காணில் அல்லால்
இப்படியன், இந்நிறத்தான், இவ்வண்ணத்தான்,
இவன் இறைவன் என்று எழுதிக்காட்டொணாதே'**
என்று திருநாவுக்கரசர் குறிப்பிட்டது போலவும்,

தெய்வத்தை ஆராதனை செய்ய முற்படும் பொழுது, சொல்ல வேண்டிய தொடக்க மந்திரங்களை உச்சரித்து அவனது அருளை முதற்கண் பெற்றுப் பூஜையைத் தொடங்குவது நல்லது. இது பூஜை செய்வதற்குத் தேவையான முழு மன நிம்மதியை, நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வாறாக நல்ல சூழ்நிலை ஏற்படாவிட்டால் நாம் சொல்லும் மந்திரங்களும் எத்தனை தெய்வீகமானதாக இருந்தாலும் அவை யாவும் இயந்திரத்தை முடுக்கி விட்டது போன்று திரும்பத் திரும்பச் சொல்லும் அர்த்த புஷ்டியில்லாதவையாக முடியும். எனவே பூஜை செய்ய விரும்பும் ஒவ்வொரு சாதகனும் பூஜையை ஆரம்பிப்பதற்கு முன் மேற் சொன்ன முறையை அனுசரித்து நடந்து, தக்க தெய்வீக சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

**ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு** 725

**வேற்றரசர் அவையில் அவர் கேட்டதற்கு அஞ்சாமல் விடை கூறும் பொருட்டு முறைப்படி அளவை (தருக்க) நூலை அறிந்து கற்க வேண்டும்.**

# கால சம்ஹார மூர்த்தி

(சென்ற இதழின் தொடர்ச்சி......)

**'நோயுற்றடராமல் நொந்து மனம் வாடாமல்**
**பாயிற் கிடவாமல் பாவியேன் - காயத்தை**
**ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒண் போரூர்**
**ஐயா நின்**
**சீர் அடிக்கீழ் வைப்பாய் தெரிந்து'**

இவர்கள் வேண்டியது போல நாம் நோய்கள் பல உற்று நலிவுறாமலும் கவலைகள் பல அடைந்து மனம் நொந்து வாடி வருந்தாமலும், படுத்த படுக்கையாகப் பல நாட்கள் கிடந்து துடித்துப் பரிமலப் பிடாமலும், நல்லபடியே இன்னல் எதுவும் இன்றி இறையுணர்வோடும் மனநிறைவோடும் நம் உயிர் நீங்கப் பெறவேண்டுமென விரும்புவோமாயின் அப்பேறு குறித்து ''அப்போதைக்கு இப்போதே'' காலசம்காரமூர்த்தியினை பலகாலும் பணிந்தால் நன்மை பயக்கும்.

சிவபெருமான் காலனைக் காலால் கடிந்து, கால சம்ஹார மூர்த்தியாகத் தோன்றி, மார்க்கண்டேயர் என்னும் முனிவர்க்கு அருள் செய்தார். கௌச்சிக முனிவரின் புதல்வராகிய மிருகண்டு முனிவர் முற்கல முனிவரின் புதல்வியாகிய மருத்துவதி என்னும் அம்மையை மணந்து, இல் வாழ்க்கை நடத்தி வந்தனர். தமக்குப் புத்திரப் பேறுகள்கிடைக் காமையால் மிருகண்டு முனிவர்காசித் தலத்திற்குச் சென்று, சிவனை நோக்கிக்கடும் தவம் புரிந்தார். சிவனின் அருளால் அவருக்கு மார்க்கண்டேயர் என்னும் புதல்வர் தோன்றினார். அவருக்கு ஆயுள் 16 வயது காலமே என அறிந்து தாய் தந்தையர் வருந்தினர். தந்தை தாயின் கவலையை அறிந்த மார்க்கண்டேயர், ''யான் சிவபெருமானைப் பூசித்து இறைநிலை பெறுவேன், நீவிர் கலங்கற்க'' என்று கூறிச் சிவபூசை செய்து வந்தார். அவரது வாழ்நாட்காலம் முடிதலை அறிந்த காலன் (எமதருமன்) அவரது உயிரைக் கவர்ந்து செல்லப் போந்தான் அவனது வருகையை அறிந்த மார்க்கண்டேயர், தான் வழிபட்டு வந்த சிவலிங்கத்தைத் தழுவி அணைத்துக் கொண்டு அடைக்கலம் புகுந்தனர். காலன் மிகவும் சினம் கொண்டு, அவர் மீதும் அவர் தழுவி அணைத்திருந்த சிவலிங்கத்தின் மீதும், தனது பாசத்தை வீசிப் பற்றிப் பார்க்க முனைந்தான். உடனே சிவபெருமான் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, தமது இடக் காலால் காலனை எற்றிச் சிறிது உதைத்தனர். காலன் நிலைகுலைந்து கீழே விழுந்து மூர்ச்சித்து மயங்கினான். மயக்கம் தெளிந்ததும் தன் தவறுணர்ந்து பிழை பொறுத்தருளும்படி சிவனை வழிபட்டார். சிவன் மார்க்கண்டேயரை என்றும் 16 வயதுடன் சிரஞ்சீவி ஆகவிளங்கும் படி அருள்புரிந்து ''இனி என்றும் என்னுடைய அடியார்களை நீ அணுகற்க' என்று காலனுக்குப் பணித்து விடை கொடுத்து அனுப்பினார்.

இதனால் சிவபெருமானுக்குக் காலகாலன் என்றும், காலசம்காரர் என்றும் பெயர்கள் விளங்குவனவாயின. இத்திரு நாமங்களை வணங்குபவர்கள் நொயுற்றடராமல் நொந்து மனம் வாடாமல், பாயிற்கிடந்து பதையாமல், இறப்பச்சம் துன்பமும் சிறிதுமின்றி, தம்

வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்அவை அஞ்சு பவர்க்கு 726

வீரமுடையவர் அல்லாதவர்க்கு வாளோடு என்ன தொடர்பு உண்டு? அதுபோல நுண்ணிய அறிஞரின் அவைக்கு அஞ்சுபவர்க்கு நூலோடு என்ன தொடர்பு?

வாழ்நாளின் முடிவில் இனிதாக உயிர் துறக்கும் பேறுபெறுவர். காலசம்காரம் சோழ நாட்டில் திருக்கடவூர் என்னும் தலத்தில் நிகழ்ந்ததாகப் புராணங்கள் கூறும்.

**'மார்க் கண்டர்க்காக**
**மறலிபட்டபாட்டை, உன்னிப்**
**பார்க்கின் அன்பர்க்கும் என்ன**
**பயங்காண் பராபரமே'**

- தாயுமானார் -

இறைவன் பின்னர் தேவர்களின் வேண்டுகோளின்படி கூற்றுவனை உயிர் பெற்றெழச் செய்து'' இனி எம்முடைய அடியார்கள் பக்கலில் நீ அணுகுதலும் செய்யாது அஞ்சி நடந்து கொள்க, உய்ந்து செல்க" என விடை கொடுத்தார் என புராண வரலாறு கூறும்.

இவரைவிட தம்மைத் தியானஞ் செய்த சிலாத முனிவருடைய புத்திரராகிய திருநந்தி தேவர் பொருட்டாகவும், திருவெண்காட்டில் சுவேதகேது என்னும் பிராமணர் பொருட்டாலும், சுவேதராசன் பொருட்டாகவும் ஒவ்வோர் கற்ப காலத்தில் சிவன் இயமனை உதைத் தடக்கியருளினார் எனப் புராண வரலாறு கூறும். இதனால் இவருக்கு காலாயி என்ற பெயரும் கூறப்படுகின்றது.

திருநாவுக்கரசன்

**"தோடுலா மலர் கடுவித்தொழ தெழமார்க்**
**கண்டேயர்-**

என்ற பாடலிலும் சுந்தரர்

**'அந்தனாளனுன் னடைக்கலம் புகுத**
**வவனைக் காப்பது காரணமாக**
**வந்தகாலன் றனாருயிரதனை**
**வவ்வினாய்க் குன்றன் வன்மை கண்டடியேன்**
**எந்தைநீ யெனை நமன்றமர் நலியி**
**லிவன் மற்றென் னடியானென விலக்குஞ்**
**சிந்தையால் வந்துன்றிருவடி யடைந்தேன்**
**செழும் பொழிற் றிருப்புன் கூருளானே'**

திருநாவுக்கரசன் *(காலபாசத் திருக்குறுந் தொகையில்)*

**'வாமதேவன் வளநகர் வைகலும்**
**காமமொன்றிலராய்க் கைவிளக்கொடு**
**தாமந்தூபமுந் தண்ணலுஞ் சாந்தமும்**
**ஏமமும் புனைலா ரெதிர் செல்லலே'**

சிவபெருமான் இயமனை உதைத்துக் கொல்லும்படி காலாரி மூர்த்தங் கொண்டமையால் உலகத்திலே பரிபக்குவமாயுள்ள மேலவர்கள் அவனுடைய அச்சத்தினின்றும் ஒரு சிறுது நீங்கப் பெற்றவர்களாக இருக்கின்றனர்.

இறப்பொடு பிறப்பை எண்ணினார் நெஞ்சம் பகிர் எனும், இருவிழியும் துயிலுறா, எரியிடை மெழுகுபோல உடல் இளைத்து இரவு, பகல் கூறாகும் ''எனக் கூறும் தாயுமானவர் இனி எனக்குப்பயம் இலில்" அன்பர்களும் பயப்பட வேண்டா, மார்க்கண்டர் உயிரைக் கவரவந்த மறலி (எமன்) என்ன பாடுபட்டான் என்பதை நினைத்துப் பார்த்தால் நமக்குப்பயமும் உண்டாகுமே? என்னும் கருத்தமைய.

''மார்க்கண்டர்க்காக அன்று மறலிபட்ட பாட்டை, உன்னிப் பார்க்கின், அன்பர்க்கு என்ன பயங்காண், பராபரமே" எனப் பாடிமகிழ்கின்றார். ஆதலின் கால சம்ஹார மூர்த்தியை சிவனின் திருவடிகளை நாம் அன்புடன் பணிந்து வழிபட்டு வந்தால் மார்க்கண்டர் போல் நமக்கும் மரணபயமும், மன வேதனைகளும் நெருங்கா என்பது திண்ணம்.

**பகைஅகத்துப் பேடிகை ஒள்வாள் அவைஅகத்து**
**அஞ்சுமவன் கற்ற நூல்** 727

**அவைக்கு முன் நின்று அதற்கு அஞ்சி நடுங்குபவன் கற்ற நூல், போர்க்களத்தில் நின்று போருக்கு அஞ்சும் பேடி பிடித்த கூர்மையான வாள் போன்றது.**

# இலிங்கோற்பவ மூர்த்தம்

பீ. எஸ் சர்மா
B.Sc. Dip. in Ed.

இலிங்கோற்பவம் என்ற சொல் இலிங்கத்தினுள் இடம் பெறும் தோற்றம் அல்லது செயற்பாடு என்ற பொருளைக் கொண்டது. சிவஸ் தலங்களில் கருவறையின் மேற்குத் திசைச் சுவரின் புறத்தே உள்ள கோஷ்ட பஞ்சரத்தின் மேற்கு நோக்கியவாறு இம் மூர்த்தம் நிலை கொண்டிருப்பதைக் காணலாம். இலிங்கோற்பவ மூர்த்தம் கருவறையின் மேற்குக் கோஷ்ட பஞ்சரத்தில் அமைய வேண்டும் என உத்தர காரணாகமம் கூறுகின்றது.

காமிகாகமமும், காரணாகமமும் 'இலிங்கோற்பவ மூர்த்தம்' என்ற படலத்தில் இம் மூர்த்த வடிவமைப்பைப் பற்றிய விதிமுறைகளைக் காட்டுகின்றன.

மூலஸ்தானத்தில் உள்ள மூல இலிங்கத்தின் அளவையும், பிரமாணத்தையும் அடிப்படையாகக் கொண்டே இலிங்கோற்பவ மூர்த்தியின் அளவுப் பிரமாணம் அமைய வேண்டும் என்பதைக் காரல ஆகமம் சகளாதிகாரமும் வரை விலக்கணம் கூறி விளக்குகின்றது. இதனை ஸ்ரீ சாரஸ்வதிய சித்ரகர்ம சாஸ்திரமும் காட்டுகின்றது.

ஒரு கற்பாந்தரத்தில் பிரமனும், திருமாலும் முறையே படைத்தல், காத்தல் தொழில்களை ஆற்றி வரும் போது இறுமாப்புக் கொண்டு, தாங்கள் இருவரில் யார் பெரியவர் என்று வாதிட்டனர். தங்கள் இருவரை விட ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒருவன் இருக்கின்றான் என்ற சிந்தனை இருவருக்குமே ஏற்படவில்லை. இருவரும் வாதிட்டபோது அவர்களுக்கு இடையில் ஒரு பேரொளி அதன் அடியும், முடியும் எல்லை காண முடியாதவாறு தோன்றியது. அதைப் பார்த்து இருவரும் திகைத்து நின்றனர். அதன் அடியையோ அல்லது முடியையோ முதலில் கண்டு திரும்புபவரே சிறந்தவர் என்ற சமரசத்திற்கு வந்தனர். இதற்கிணங்க பிரம்மா அன்னப் பறவை வடிவெடுத்து உச்சியைத் தேடி உயரப் பறந்தார். திருமால் பன்றி வடிவெடுத்து அடியைத் தேடி அகழ்ந்து கொண்டே கீழே சென்றார். அடியும் முடியும் காண இருவரும் ஆற்றல் அற்றவர்களாகத் திரும்பி வந்தனர். பின் அவர்கள் கர்வத்தை அடக்க சிவன் அவர்களுக்குப் புலனாகித் திருவருள் பாலித்தார். இப் புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டது இலிங்கோற்பவ மூர்த்தியின் அம்சம். இப் புராணக் கதையை இலிங்க புராணம், கூர்ம புராணம், பிரம்ம புராணம், சிவபுராணம், ஸ்கந்த புராணம், சனத்குமார சம்ஹிதை போன்றவை விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

இலிங்கோற்பவ மூர்த்த தத்துவத்தில் அடி முடி காண முடியாத ஒளி வடிவாகச் சிவன் தோற்றம் பெற்று பிரம்மா, விஷ்ணு ஆகியோருக்குத் தன் பிரபாவம் காட்டி, இறுதியில் சிறு மலையாகக் குறுகிய இடமே திருவண்ணாமலை எனக் குறிப்பிடும் ஐதீகம் உள்ளது. இதனையொட்டி ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை மாதத் திருக்கார்த்திகைத் தினத்தன்று திருவண்ணாமலை ஜோதி வடிவாகக் காட்சி தருவதை அருணாசலப் புராணம் காட்டுகின்றது.

எங்கும் வியாபித்துள்ள பரம்பொருளை ஒளிவடிவாக வணங்கும் மரபு இருக்கு வேதத்தில் காட்டப்பட்டுள்ளது என்பதை மக்டொனல் குறிப்பிடுகிறார்.

இலிங்கோற்பவ மூர்த்தியின் அடிப்படை

பல்லவை கற்றும் பயம்இலரே நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தார் 728

நல்லி அறிஞரின் அவையில், தாம் கொண்ட அச்சம் காரணமாக நல்ல கருத்துக்களை அவர் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர், பல நூல்களைக் கற்றிருந்தாலும் உலகுக்குப் பயன்படாதவரே ஆவர்.

அம்சங்களை ஆகமங்களும், புராணங்களும் தரும் விவரங்களின் தரவுகளின் மூலம் கைலாச நாதக் குருக்கள் தமது ஆய்வில் விரிவாகக் கூறுகின்றார். சிற்ப நூல்களும், ஆகமங்களும் கூறும் அடிப்படை அம்சங்களுடன் வேறு பல அம்சங்களையும் இலிங்கோற்பவ மூர்த்தி தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இலிங்கோற்பவ மூர்த்தியின் முழு உயரத்தை மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஆகப் பிரித்து, அதன் ஒரு பகுதியை இலிங்க உச்சமாகவும், அதே அளவுக்குச் சமனான பகுதி இலிங்க அடியாகவும் கொள்ள வேண்டுமெனக் காமிகாமம் கூறுகின்றது.

இடையில் உள்ள பகுதியின் அரைப்பங்கு முழு இலிங்கோற்பவ மூர்த்தத்தின் உச்சமாகவும் அதே அளவு அடிப்பாகமாகவும் அமைதலை 'அதமமானம்' எனக் குறிப்பிடுவர்.

இலிங்கோற்பவ மூர்த்தத்தின் மத்தியில் அமையும் பரமசிவரூபம், உத்தம, மத்திம, அதம மானங்களாக ஆகமங்கள் கூறும் வகையிலே சிற்ப நூல்களும் கூறுகின்றன. இலிங்கோற்பவ மூர்த்தத்தில் ஆறு பகுதியில் நான்கு பகுதி பரமசிவரூபமாகவும், ஒரு பகுதி இலிங்க உச்சமாகவும், மீதி ஒருபகுதி அடியாகவும் அமைவதை உத்தமமானம் எனவும், மொத்தம் ஐந்து பகுதியில் மூன்று பகுதி பரமசிவ ரூபமாகவும், எஞ்சிய ஒவ்வொரு சம பகுதிகள் இலிங்க உச்சமாகவும் அடியாகவும் இருப்பதை மத்தியமானமாகவும் மொத்தம் நான்கு பகுதிகளில் இரண்டு பகுதி பரமசிவ ரூபமாகவும் எஞ்சிய ஒவ்வொரு சம பகுதிகள் இலிங்க உச்சமாகவும் அடிப்பகுதியாகவும் இருப்பதை அதமமானமாகவும் கொள்வர். அத்தோடு இலிங்கோற்பவ மூர்த்தம் ஆறு பங்குகளாக்கப்பட்டு அடையில் உள்ள இரு பகுதிகள் பரமசிவரூபத்திற்கு ஓதுக்கப்பட வேண்டுமென்பதையும் கூறுகின்றது.

காரணாகமும், காமிகாமமும் இலிங்கோற்பவ மூர்த்தியின் அமைப்புத் தொடர்பாக தரும் விவரங்களில் ஒற்றுமை நிலவுகின்றது. இலிங்கோற்பவ மூர்த்தியின் பரமசிவரூபத்தில் உள்ள சிவனது முக அளவை அடிப்படையாகக் கொண்டு அன்னத்தினது அமைப்பின் அளவும், முக அளவின் இரு மடங்கு பெரியதாக வராகமும் அமைதல் வேண்டும் என காமிகாமம் காட்டுகின்றது.

அத்தோடு இலிங்கத்தின் இரு பக்கங்களிலும் பிரம்மா, விஷ்ணு அஞ்சலி செய்யும் பாவனையில் அமைதல் வேண்டும் என்றும் இது கூறுகின்றது.

இலிங்கோற்பவ மூர்த்தத்தின் மொத்த நான்கு பகுதிகளில் இடை இரு பாகங்களும் அரைச் சந்திர அமைப்பில் சிவனது திருவுருவமும் அமைதல் வேண்டும் என காரணாகமம் கூறுகின்றது. இங்குக் காமிகாமமும் காரணாகமமும் கூறும் விதி முறைகளில் ஒற்றுமையைக் காணலாம்.

இலிங்கோற்பவ மூர்த்தத்தின் ஆகக் குறைந்த உயரம் ஐந்து முழமாகவும் இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இலிங்கோற்பவ மூர்த்த உயரத்தில் அரைப் பங்கு விட்டமாக அமையும் எனவும் சில வேளை குறித்த அளவு வேறுபடுமாயின் மூர்த்தியின் உயரத்தில் மூன்றில் ஒரு பங்காகவோ நான்கில் ஒரு பங்காகவோ அமையப் பிரமாணம் வேறுபடலாம்.

பரமசிவரூபத்தில் அமைய வேண்டியது சந்திரசேகரமூர்த்தமாகும் என்பதைக் காமிகாகமம் காட்டுகின்றது. சந்திரசேகர மூர்த்தத்தின் அடிப்பகுதியில் அம் மூர்த்தியின் முழங்கால் வரையில் மாத்திரம் வெளியே தெரியும் வகையில் அமைதல் வேண்டும்.

கல்லா தவரிற் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார் 729

நூல்களைக் கற்று அவற்றின் பயனை அறிந்திருந்தும், நல்ல அறிஞர் அவைக்குஅஞ்சி, அங்கு அவற்றை எடுத்துக் கூறமுடியாதவர், கல்லாதவரைவிட கடைப்பட்டவர் என்று அறிஞர் கூறுவர்.

ஆகமங்களின் அடிப்படையில் இலிங்கோற்பவ மூர்த்தியின் இலிங்க உச்சிப் பகுதியில் பிரம்மாவை அன்னப்பட்சியின் உருவத்திலும், அடிப்பகுதியில் விஷ்ணுவைப் பன்றி உருவத்திலும் அமைத்தல் வேண்டும்.

இலிங்கோற்பவ மூர்த்தியின் இரு மருங்கிலும் பிரம்மாவும் விஷ்ணுவும் இறைவனைத் துதிப்பதாகவும் சிவன் சுந்தர வடிவான பொலிவுத் தோற்றத்தினைக் கொண்டும் அமையலாம். சில வேளைகளில் இலிங்கோற்பவ மூர்த்தத்தின் மேற்பகுதியில் அன்னமும் அல்லது அன்னத்தின் மேல் பிரம்மா இருக்க கீழ்ப்பகுதியில் பன்றி அல்லது பன்றியின் மேல் விஷ்ணு வீற்றிருப்பதையும் சித்தரிக்கப்பட்டிருப்பதைப் பல்வேறு படி நிலைகளில் பல்வேறு இடங்களில் நாம் காணலாம்.

காரணாகமத்தின் விளக்கத்திற்கிணங்க பரமசிவரூபத்தில் உள்ள சந்திரசேகர மூர்த்தத்தின் நெற்றிவரையுமே புலனாகும் வகையில் அதன் மேற்பகுதி பிரம்மசிவரூபத்தின் மேற் பகுதியுள் மறைந்திருத்தல் வேண்டும். அத்தோடு கீழ்பகுதி கணைக்கால் வரையுமே புலப்படும் வண்ணம் அமைதல் வேண்டும். எனவே, கீழ்ப்பகுதியின் அளவு பற்றி காரணாகமம் கணைக்கால் பகுதி வரையும் எனவும், காமிகாகமம் முழங்கால் பகுதி வரையும் எனவும் காட்டுகின்றன. மற்றைய சந்திரசேகர மூர்த்தத்தின் அம்சங்களைப் பற்றி இரு ஆகமங்களும் ஒற்றுமை கொண்டுள்ளன.

இலிங்கோற்பவ மூர்த்தியின் அடிப்பகுதியில் வராக அம்சம் அமைந்திருக்கும் நிலைக்குக்கீழ் ஸங்கர்ஷண மூர்த்தி அமைவு பெற வேண்டு மென விதி உள்ளது.

இலிங்கோற்பவ மூர்த்தியின் இரு புறங்களிலும் தேவதைகள், தேவரிஷிகள், முனிவர்கள், சூரியன், சந்திரன் போன்றோரின் உருவங்கள் இருத்தல் வேண்டும் எனவும் காட்டப்பட்டுள்ளது.

இலிங்கோற்பவ மூர்த்திக்கு இலிங்காவதாரம் என்ற அவதார நாமம் சூட்டி ஆகம மரபில் அதன் அமைப்புக்களைச் சகளாதிகாரம் சுட்டி நிற்கின்றது.

இலிங்காவதாரத்தின் பரமசிவரூபத்தில் அமையும் சிவனது மூர்த்தத்தின் முழங் காலுக்குக் கீழேயுள்ள பகுதியாகிய நளிகை என்ற மட்டத்திற்குக் கீழ்ப்பகுதி இலிங் கோற்பவத்தின் அடிப்பாகத்தினுள் மறைந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

நளிகை மட்டத்திற்குக் கீழே உள்ள பகுதி மறைந்திருக்க வேண்டும் எனவும் இவை சுதை மூர்த்தியாக அமையும்போது சிவன் சிவப்பு நிறமாகவும், விஷ்ணு நீல வர்ணமாகவும், பிரம்மா மஞ்சள் வர்ணமாகவும் இடம்பெற வேண்டும்.

இலிங்கோற்பவ மூர்த்தத்தின் பரமசி வரூபத்தில் அமையும் சிவனின் உருவத்தின் கைகளில் ஒன்று சூலாயுதத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும்.

இலங்கையில் முன்னேஸ்வரம் கோயிலில் உள்ள இலிங்கோற்பவ மூர்த்தத்தில் பரமசிவரூபம் குடைந்தெடுக்கப்படாமல் இலிங்க நிலையில் பரமசிவரூபத்தை ஒரு ஒளிப்பிளம்பின் எல்லையாகக் கோடிட்டுக் காட்டி அப்பரம்பினுள் சந்திரசேகர மூர்த்தம் கோடுகளால் கீறப்பட்டு இலிங்க உச்சப் பகுதியில் அன்னமும், இலிங்க அடியில் வராகமும் கீறப்பட்டுள்ளன. நான்முகனும், திருமாலும் இலிங்கோற்பவ மூர்த்தத்தில் இருபுறங்களிலும் காணப்பட வில்லை.

*(மிகுதி அடுத்த இதழில் ......)*

உள்ளனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார் 730

தாம் கற்றவைகளை அவைக்கு அஞ்சி அவர் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர் உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவரோடு ஒப்பர்.

# திருவாரூர் நான் மணிமாலை

பிள்ளைக் கவி
**வ. சிவராஜசிங்கம்**

திருவாரூர் நான்மணிமாலை என்பது திருவாரூர் தலம் பற்றிய நான் மணிமாலை என விரியும். நான் மணிமாலை என்பது வெவ்வேறு வகையான நான்கு மணிகளைத் தொடுத்தமைத்த மாலை போல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்பவை முறையே அந்தாதியாய் அமைய நாற்பது பாக்களால் பாடுவது, இந்நூலில் திருவாரூர்ச் சிறப்பு, தல மூர்த்தியாகிய தியாகேசர், சிறப்பு அடியார் சிறப்பு ஆகியன பேசப்படுகின்றன.

திருவாரூர் சோழநாட்டின் காவிரியின் தென்பால் கவின் பெற்று விளங்குவது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. திருத்தொண்டர் புராணத்தில் திருநகரச் சிறப்பில் இதன் பெருமைகள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அன்றியும் திருவாரூர் உலா, திருவாரூர்க் கோவை, ஆகிய நூல்களும் இத்தலச் சிறப்பைப் பலபடப் பேசுகின்றன.

இறைவன் எங்கும் உறைகின்றான். ஆயினும், சில இடங்களில் அவன் திருவருள் பாலித்தற் பொருட்டுச் சிறப்பாக எழுந்தருளி இருப்பான். எல்லாப் பொருள்களிலும் அவன் அபின்னமாக உள்ளான். எனினும் மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களாக இலங்கு கின்றான் என்பதைப் புலப்படுத்துதல் போன்று பஞ்சலிங்கத் தலங்கள் விளங்குகின்றன. அவை ஒவ்வொன்றும் ஐம்பூதங்களில் அடையாளமாக அமைந்துள்ளன. திருவாரூரில் இறைவன் மண் வடிவமாக விளங்குகின்றான். திருவாரூர் நிலமகளின் இதயகமலமாக விளங்குகிறது என்பர். இத்தலம் அம்பிகை தவஞ்செய்த இடமாதலின் சக்திபுரம் எனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமையால் கமலாலயம் எனவும் தேவர்கள் கறையான் வடிவு கொண்டு இயற்றிய பற்றை இடமாகக் கொண்டு இறைவன் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளியமையின் வன்மீகமெனவும் அழைக்கப்பெறும். இறைவன் புற்றினில் கோயில் கொண்டு எழுந்தருளிய புதுமையை குமரகுருபரர் தம் கற்பனைத் திறத்தால் சிறந்த நயம் தோன்ற, ஓர் இனிய பாடலில் விளக்குகின்றார். கரும்பு போன்ற நெல்லையுடைய வயல் சூழ்ந்த திருவாரூரிலே இறைவன் பல விந்தையான காரியங்களைச் செய்துள்ளார். கண்டோர் அஞ்சும் தன்மை வாய்ந்த பாம்புப்புற்றை இருப்பிடமாகக் கொண்டார். அது தாமல்லாமல் வெருவுதற்கு இடமாகிய பாம்பை விரும்பி ஆபரணமாக அணிந்துள்ளார். அத்தோடு அமையாது கொடிய விடத்தையே வாயில் இட்டு விழுங்கி விட்டார். இவ்வாறான துணிகரச் செயல்களை இவர் மேற்கொள்வதற்கு இவருக்குத் தைரியம் ஏற்படக் காரணம் பக்கத்தில் ஓர் மயில். மயிலைக் கண்டு பாம்பு ஒடுங்குவது இயல்பு தானே. அம்பிகையாகிய மயில் அயலே இருப்பதனால் தான், இறைவனுக்கு இப்படியாக துணிவு பிறந்தது என்று சமத்காரமாகப் பாடுகிறார்.

**கரும்புற்ற செந்நெல் வயல் கமலேசர் கண்டார்க்கும்**
**அச்சம்**
**தரும் புற்றினில் குடிகொண்டிருந்தார்**
**அதுதானுமின்றி**
**வீருப்புற்று மாசுணப் பூண்அணிந்தார் வெவ்விடமும்**
**உண்டார்**
**கம்புற்ற கார்வரைத் தோகை பங்கானதுணிவு**
**கொண்டே**

திருவாரூரில் உள்ள இறைவனின் மூர்த்தங்களுள் ஒன்று சோமஸ்கந்த மூர்த்தம்

அதாவது இறைவனும் அம்பிகையும் கந்தகுமாரரும் ஒருங்கே அமைந்த தோற்றம். இந்த முகூர்த்தம் தோன்றியமைக்கு ஒரு வரலாறு உண்டு. கயிலாயத்திற்கு இறைவனை வழிபடச் சென்ற திருமால் அம்மையை வணங்காது அப்பனை மட்டும் வணங்கி மீண்ட சமயத்தில் அம்பிகை சினங் கொண்டு திருமாலைச் சபித்ததோடு இறைவன் அருளும் கிட்டாது செய்தாள். தன் தவறை உணர்ந்த விஷ்ணு மூர்த்தி அம்மையின் அருளைப் பெற, எண்ணி அவரின் உள்ளத்தைக் கனியச் செய்தற் பொருட்டு குழந்தை முருகனோடு அம்மை அப்பனை ஒருங்கே தாபித்து வழிபட்டார். அவருடைய உபாயம் வீண்போகவில்லை. அம்மையின் அருள் கிட்டியது. விஷ்ணு தாபித்த இவ்வடிவத்தின் அருள் திறனைக் கண்டு இந்திரன் பூசித்தற் பொருட்டு அதனை வேண்டிக் கேட்ப மாயவன் அதனை வாசவற்குக் கொடுத்தனன். பின்னர் வலாசுரன் என்பானுக்கு எதிராக இந்திரன் நிகழ்த்திய போரில், துணை நின்ற முசுகுந்தச் சக்கரவர்த்தி இம் மூர்த்தத்தை இந்திரனிடமிருந்து பெற்றுத் திருவாரூரில் நிறுவினான் என்பது திருவாரூர்ப் புராணம், கந்தபுராணம் ஆகிய நூல்கள் கூறும் வரலாறு, இச்செய்தியை ஆசிரியர் ஓர் செய்யுளில் எடுத்தாளுகின்றார். விஷ்ணு மூர்த்தி மிக வருந்தி இவ்வுருவினை அமைத்தார் என்பதனையும் மிகுந்த பரிவோடும் வழிபட்டார் என்பதனையும் புலப்படுத்தற் பொருட்டு, திருமால் அன்பாகிய பெருங்கடலில் அமுதம் போலத் தோன்றினார் கமலேசர் எனச் சுவைபடக் கூறுவார். இத்தகைய மூர்த்தியின் அருமைப்பாட்டினை ஒரு அருமைப் பாட்டினில் கூறுகின்றார். சோமாஸ்கந்த மூர்த்தத்தில் உள்ள மூவரும் வெவ்வேறு நிறமுடையவர்கள் பவளமால் வரையில் நிலவெறிப்பது போல் பரந்த நீற்றழகுடன் சிவபெருமான் வெண்ணிற உருவினராகவும், உமையம்மை பசியமயில் போன்றும் பிள்ளை முருகன், உலகம் உவப்பவலனேர் புதிரிதரு பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு சேயொளி படைத்த தோற்றத்தினராகவும், திகழ்வர். இவர்கள் இவ்வாறு திகழ்வதனை அருவத்தையே உருவாகப் பெற்ற குணங்கள் உமையம்மையின் நீலநிறம் தாமத குணத்திற்கும், முருகப் பிரானின் செந்நிறம் ராஜத குணத்திற்கும், உரியன ஆதலின் இவ்வாறு கூறினார். முக்குணமுடைய மூர்த்திகளால் உலகத்தின் படைப்பு முதலியன நடைபெறுதலால் அம்முக்குணங்களுக்கும் உருவம் போன்ற இவர்கள் இவற்றை நடாத்துவார் போன்றே விளங்குகின்றனர். இதனாலேயே தியாகேசர் அகிலா காரணர் எனப் போற்றப்படுகின்றார்.

**மல்லல்வளம் கவீந்த புகழ்க் கமலேசர்**
**திருவுருவம் வாம பாகத்து**
**அல்லமர் பைங்குழல் உமையாள் திருவுருவம்**
**இருவருக்கும் பசுங்குழலி திருவுருவம்**
**கொல்லயில்வேல் பசுங்குழலி திருவுருவம்**
**அருவுருவாம் குணங்கள் மூன்றின்**
**நல்லுரு ஆதலின் அன்றோ இவர் அகில**
**காரணராய் நவில்கின்றாரே.**

தியாகேசரது சோமஸ்கந்த மூர்த்தம் ஆசிரியரைக் கவர்ந்தது போன்றே அவரது அர்த்த நாரீஸ்வர வடிவமும் குமரகுருபரரின் சிந்தையைக் கொள்ளை கொள்வதாயும் அதனால் கற்பனை ஊற்றைப் பிரவாகிக்கச் செய்வதாயும் திகழ்கிறது. இறைவர் இவ்வடிவம் கொண்டுள்ள ஒரு செய்தியைப் பல்வேறு பொருள் நோக்கில் கண்டு பல்வேறு நயந்தோன்றும்படி பல சுவை நலங் கனிந்தூறு பாடல்களை ஆக்கியுள்ளார். இத்திருவுருவத்தைப் பற்றிக் கூறவந்த ஓரிடத்தில் ஒன்றே உடம்பு அங்கு இரண்டே இடும் பங்கு என்பார். இன்னோரிடத்தில் கண்டம் மட்டும் இரண்டு பாதி பசந்து, பாதி சிவந்துள்ளார் என நிறத்தில் உள்ள வேறுபாட்டைக் கூறுவார். பிறிதோரிடத்தில் சிவபெருமானது வலப்பாகம், உமாதேவியாரின் திருவிழிபாய்ந்து கருநிறம் பெற்றும், இறைவரின் பார்வை அம்மையின் மேனியில் தொய்வதனால், அது செந்நிறமுற்றும்

விளங்குதலின் இன்னபாகம் இன்னாருடையது எனச் சொல்லவியலாத மயக்க நிலையுடையதாகிறது என்பார். இத்திருவுருவில் உள்ள பாகங்கள் நிறத்தில் மட்டுமல்லாமல் நிகழ்த்தும் தொழிலிலும் மாறுபட்டு நிற்கும் இயல்பின என்று கூறுவார். ஒரே காலத்தில் ஒரே இடத்தில் ஒரு பாகம் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்க, மறுபாகம் இரத்தல் தொழிலை மேற்கொள்ளலாகிய விந்தைச் செயலைத் திருவாரூரில் தான் காணலாம் என்று கூறுவர். அருள் வழங்கும் கை இடப்பக்கத்தில் உள்ளது. அப்பக்கமே அறம் வளர்ந்த நாயகிக்கு அமைந்த பாகம் பிட்சாடணராகப் பலி ஏற்ற கரம் வலப்பக்கத்து அமைந்தது. சிவபெருமானது பாகம். இக்கருத்தை அடிப்படையாக வைத்தே உலகத்தில் ஈகையாளரும் இரவலரும் தனித்தனியே இருப்பது இயல்பாக, இவ்வுருவத்தில் ஒரு பால் கொடுத்தலும், மறுபால் ஏற்றலும் அமைந்தது வியப்பு என்றார். இன்னொரு பாடலில் இறைவனுக்குரிய பெருமையெல்லாம் அம்பிகையால் வந்ததேயன்றி, தியாகேசருக்குப் பெருமையோ, சிறப்போ இயல்பாக அமைந்தது அல்ல என்று கூறுவார். அவர் வரமருள்கரம் உடையவர் என்று கூறுவதெல்லாம் உபசாரம். அந்த வரதத் திருக்கரம் உமாதேவியாருடையது. அக்கரம் கொண்டு அம்மை அறம் வளர்த்த தன்மையாலேயே தியாகர் என்னும் பெயர் இறைவனுக்கு இட்டுவதாயிற்று. பெருமைக் குடையவர் உமையம்மையாக இருக்க, பெருமையடைபவர் தியாகேசர் ஆகின்றார் என்ற கற்பனையில் விளைந்த பாடலைக் காண்போம்.

**வரம் தந்தருள வரதம் வைத்தாலென் வரதம் இடக்**
**கரம் தந்ததால் இவர்கையதன்றே பலி காதலிக்க**
**சிரந் தந்த செங்கைக் கமலேசர் நாமம் தியாகரென்பது**
**அரம் தந்த வாள்விழியாள் தந்த தாம் சொல்**
**அறம் வளர்த்தே.**

இந்தப் பாடலிலே அம்மையைப் புகழ்வது போல அப்பனையே ஆசிரியர் புகழ்வதை நாம் அவதானிக்கலாம். அறம் வளர்த்த புகழுக்குரிய உமையம்மை இருப்பது இறைவன் இடத்தில் தானே. ஆதலின் அப்புகழ் அப்பனையே சாரும் இது போலே, எந்தக்கடவுள் மீது எந்தப் பெருமையை ஏற்றிச் சொன்னாலும் அந்தப் பொருண்மையும் பெருமையும் சிவபிரானையே சாரும் என்ற உண்மையை இன்னொரு இடத்தில் விளக்குகின்றார். இதுவே உண்மைப் பொருள். இம்மூர்த்தியே வரம்பொருள் எனப் பல்வேறு சமயத்தவர் தத்தம் சமய முதல்வரைப் போற்றிக் கூறுவன யாவும் சென்றடைதற்கு இடமாகத் திகழ்பவர் சிவபெருமானே. அப்பொருள் எல்லோருக்கும் பொதுவானவை ஏனெனில் அது பொதுவாகத் திகழும் இடத்திலுள்ளது. அது யாவருக்கும் உரியது ஏனெனில் அப்பொருள் ஆரூரிலும் வைகுவது இறைவன் எச்சமயத்தோருக்கும் பொதுவாக ஆரூரிலும் வைகுவன் என்று இரு பொருள் தந்து நிற்றலை அவதானிக்கலாம். பொதுவில் நிற்கும் என்பது பொதுவான இடத்தில் நிற்கும் எனவும் சபையில் அதாவது கனகசபையில் நிற்கும் எனவும் பொருள்படும். அவ்வாறே ஆரூரிலும் வைகும் என்பது யாருடைய ஊரிலும் தங்கும் எனவும், திருவாரூரில் தங்கும் எனவும் பொருள்படும். இக்கருத்து அறுவகைச் சமயத்தோருக்கும் அவ்வவர் பொருளாய், வேறாம் குறியது வுடைத்தாய் நின்ற சிவன் எனவும் யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் நாம் வருகுவர் எனவும் அமைந்த கருத்துக்களைக் கொண்டிருப்பது நோக்கத்தக்கது. இனிப் பாடலைப் பார்ப்போம்.

**இதுவே பொருளென்று எவரெவர் கூறினும் ஏற்பதெது**
**அதுவே பொருளென்று அறிந்து கொண்டேன்**
**அப்பொருள் எவர்க்கும்**
**பொதுவே என்றாலும் பொருந்தும் எல்லோர்க்கும்**
**பொதுவில் நிற்கும்**
**மதுவேய் மலர்ப் பொழில் ஆரூரிலும் வைகும்**
**வைகலுமே.**

பற்றற்றவனாகிய இறைவன் தமிழிடத்தே

வற்றாத பற்றுடையவன், அதனோடு அடியார் பால் உருகும் இயல்பினன். இவ்விரண்டு காரணங்களாலும், திருவாரூர்த் தியாகேசர் சுந்தரர் பொருட்டுப் பரவை பால் தூது நடக்கச் சம்மதித்தனர் என்கிறார். இறைவன் பாட்டுக்குருகும் தமிழ் சொக்கர். ஆதலினால் தமது சொந்தச் சிரமத்தைப் பொருட் படுத்தவில்லை. கனகமன்றில் நின்றாடிய பாதர் திருவாரூரில் இருந்தே ஆடுகின்றார். இது ஒரு கால் பரவை மாட்டு ஒரு முறையன்று. இருமுறை நடந்த களைப்பினால் போலும் ஆறணி சடைப்பரமர் ஆரூரர் பொருட்டுத் தூது சென்றது அவரின் தமிழ் வேண்டியே என எல்லப்பநயினார் தமது திருவார்க்கோவையில் குறிப்பிடுவர். "பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பால் தூதன்று போனவர்" என அப்புலவர் தியாகேசப் பெருமானைக் குறிப்பிடுவர். இறைவன் அருள்பெற எண்ணினார் விஷ்ணு. ஆயிரம் மலர் சாத்தி வழிபடத் தொடங்கியவர் ஒரு மலர் குறைவது கண்டு தனது தாமரைக் கண்ணையே மலராகச் சாத்தினார். அத்தகைய விஷ்ணு தேடியும் காணாத பாதங்கள் ஒரு அடியார் பொருட்டுச் சலியாது நடந்தன என்றால், அடியாரது ஏவலை ஏற்றுப் பணி செய்யப் புறப்பட்டன என்றால், தன் மலரை விடச் சொல்லவரே சிறந்தது என்பது தானே தாற்பரியம், என்கிறார் குமரகுருபரர்

**தன்மலரும் பொழில் தென்மலேசர்க்குச் சாத்துகின்ற**
**ஒண்மலர் சொல்மலர்க்கு ஒவ்வாது போலும்**
**மற்றோர் புலவன்**
**பண்மலர் சாத்திப் பண்கொண்டவா பச்சைமால்**
**சிவந்த**
**கண்மலர் சாத்தியும் காண்பரிதான கழல்மலரே**

இன்றும் திருவாரூர்ப் பெருமான் பெருமைகளை நிந்தாஸ்துதியாகவும், தற்குறிப்பேற்றமாகவும் பலபட விதத்தோதி மகிழ்வர். உலகத்து இன்னுயிர்யாம் என உணர்த்தி நிற்பவர் கமலேசர். அவரது சிவந்த அடிக்கு ஆளானவர் இயம தண்டனைக்கு ஆளாகார், என்பது குமரகுருபரர் வாக்கு. புற்றிடங் கொண்ட புண்ணியரைப் புவிவழிச் சென்று தரிசிக்க வாய்ப்பில்லாத நாம், கவிவழி நின்றேனும் கண்டு இன்புறுவோமாக.

## - சூரியன் துதி -
### சோம்பேறித்தனம் விலக

காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு விபூதி பூசி கிழக்குத்திசை நோக்கி இரண்டு கைகளையும் தலைக்கு மேல் குவித்து **"ஓம் நமோ ஆதித்யாயா புத்திர் பலம் தேஹிமா சதா"** என்று மூன்று முறை கூறவும். சூரியனை இருதயத்தில் கற்பனை செய்து கொள்ளவும். இப்படிச் செய்து வந்தால் சோம்பேறித்தனம் விலகி சுறுசுறுப்பும் உற்சாகமும் ஏற்படும்.

காலையில் எழும்பியவுடன்
கை பார்த்து

கராக்ரே வஸதே லஷ்மி
கரமத்யே ஸரஸ்வதி
கரமூலே து கௌரி
ப்ரபாதே கர தர்சனம்

எழும்பியதும் பூமியில்
கால் வைக்கும் போது

ஸமுத்ர வஸனே தேவி
பர்வத ஸ்தன மண்டலே
விஷ்ணு பத்னி நமஸ்துப்யம்
பாதஸ்பர்சம் க்ஷமஸ்துமே

குளிக்கும் போது

கங்கே ச யமுனே சைவ
கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி
ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரும்.

# சுந்தரர் தமிழுக்காகத் தூது சென்றான் சோமசுந்தரன்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

மகாகவி பாரதியார் செந்தமிழை, தேமதுரத்தமிழைப் பழகு தமிழை அழகொழுகப் பாடினார். அஃதே போல இந்திய மொழிகளுள் ஒன்றான தெலுங்கு பற்றியும் பாட்டிசைத்தார். **'சிந்து நதியின்மிசை நிலவினிலே சேரநன்னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்தே தோணிகளோட்டி மகிழ்வோம்'** எனப்பாடினார். இன்று ஈழத்துத் தமிழினம் வெளிநாடுகளில் தமிழை ஓரம் போக்கி ஆங்கிலம், அவ்வத்தேய மொழிகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். வாய்மொழி அந்தஸ்தைக் கூடத் தாய் மொழியாம் தமிழ் எய்தவில்லை. காரணம் வினாக்குறிதான். பக்தி மொழியான தமிழைவிடுத்து, இராசஸ்தான், தெலுங்கு கன்னடம், இந்துஸ்தான், வடமொழி, ஆங்கிலம் என்பவற்றில் (பஜன்) பசனை மேற்கொள்வது மட்டுமன்றித் தேவார திருவாசகங்களை ஏளனமுஞ் செய்கின்றனர். எதிர்காலப் பரம்பரை என்ன ஆகும்.

தாயகமான தென்பாரதத்தில் கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளிற் சைவமும், தமிழும் அழியும் உற்பாதம் வந்தபோது எதிர்த்துப் போராடி வெற்றிகண்டவர்கள் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்போராவர். இவர்கள் பாடிய தேவாரத்தை மூவர் தமிழ் எனப் போற்றியவர் தமிழ்மூதாட்டி ஔவையார். பின்னர் மணிமொழியார் தொட்டு வள்ளலார், பாரதி வரை பக்திப் பெருக்கு, தமிழையே ஊடகமாய்க் கொண்டது சம்பந்தர் திருநெறிய தமிழ் என்றார். தமிழோடு இசை பாடல் மறந்தறியேன் எனப் பேசியவர் நாவேந்தர். தமிழ்ச் சமயத்தவரான நம்பியாரூரர் பாவணத்தமிழ் எனப் பாடி மெருகூட்டினார். சுந்தரர் பெருமானுக்காக தியாகேசன் பரவையார் பால் நடு இராத்திரியில் (ஆலால சுந்தரருக்காகத்) தூது சென்றார். ஏன்தூது போனார் என்றால், சுந்தரரின் சுந்தரத் தமிழ்ப் பாடலைக் கேட்டு இரசிப்பதற்காகவே எம் பெருமான் திருப்பாதங்கள் நிலத்திற்தோய நடந்தார் எனத்தாயுமானவர் எடுத்துப் பேசுகின்றார்.

**மிடிஇட்ட வாழ்க்கையால் உப்பு இட்ட கலம் எனவும்**
**மெய்எலாம் உள்உடைந்து,**
**வீறுஇட்ட செல்வர்தம் தலைவாயில் வாசமாய்**
**வேதனைகள் உறவேதனும்**
**துடி இட்ட வெவ்வினையை ஏவினான், பாவிநான்**
**தொடர்இட்ட தொழில்கள்எல்லாம்**
**துண்டுஇட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுஉன்**
**தொண்டர்பணி செய்வது என்றோ?**
**அடிஇட்ட செந்தமிழின் அருமைஇட்டு ஆரூரில்**
**அரிவைஓர் பரவைவாயில்**
**அம்மட்டும் அடிஇட்டு நடைநடந் தருள் அடிகள்**
**அடிஈது முடிஈது என**
**வடிஇட்ட மறைபேசு பச்சிளங்கிள்ளையே!**
**வளம்மருவு தேவை அரசே!**
**வரைரா ஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை**
**வளர்காதலிப் பெண்உமையே**

*மலை வளர்காதலி 4*

(இ.ள்) அடிஇட்ட - பழமையாகிய, செந்தமிழின் - செவ்விய தமிழின், அருமைஇட்டு - அருமையைக்குறித்து, ஆரூரில் - திருவாரூரின் கண்ணே!, அரிவை - அரிவையாகிய, ஓர் - ஒப்பற்ற, பரவை - பரவையென்னும் அருமைத் திருநாமம் உடையாரது, வாயில் - தலைவாயிலாகிய, அம்மட்டும் - அத்தலை வாயில் வரைக்கும், அடிஇட்டு - திருவடிகளை வைத்து நடைநடந்தருள் - நடைநடந்தருளிய, அடிகள் - இறைவரது, அடிஈது - மூலமாகிய திருவடிஇது, முடிஈது - திருமுடி ஈறு இது, என - என்று, வடியிட்ட தெளிவித்த மறை -

வேதங்களை, பேசு - பேசுகின்ற, பச்சிளம் கிள்ளையே - பச்சிளங்கிளியே! வளம்மருவு தேவையரசே - வளம் பொருந்திய இரா மேசுவரத்தின் தலைவியே, வனராஜனுக்கு மலையரசனுக்கு, இருகண்மணியாய் உதித்த - இருகண்மணி போல் பிள்ளையாகப்பிறந்த காதலிப்பெண் உமையே மிடியிட்ட - வறுமை யாகிய, வாழ்க்கையால் - வாழ்க்கையினால், உம்பு இட்ட - உம்பு வைத்த, கலம் எனவும் - மட்கலம் போலவும், மெய் எனலாம். சரீரமனைத்தும், உள் உடைந்து உள்ளுடைந்து வீறிட்ட மிகுந்த, செல்வர் - செல்வரது, தலைவாசல் - தலைவாயிலே, வாசமாய் - வாசமாகக் கொண்டு, வேதனைகள் ஊற - துன்பங்களை அடைய, வேதனும் - பிரமனும், துடியிட்ட - பதைப்பதற்குரிய, வெம்வினையை - கொடிய வினைகளை, ஏவினான் - ஏவிவிட்டான், பாவி நான் - பாவியாகிய நான், தொடரிட்ட - தொடங்கின தொழில்கள் எல்லாம், சாண்கும்பியின் பொருட்டாயது - சாண் வயிற்றின் அளவாயினவே (இது கடந்து) உன்தொண்டர் - உன் அடியார் பணி - கருமங்களை, செய்வது என்றோ - செய்வது எக்காலமோ! உரை எழுதியவர் பூவை கல்யாண சுந்தர முதலியார்.

சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே எனப்பட்டினத்தார் பாடினார். உப்புப் போட்ட பாத்திரம் வெளிப்பார்வையில் அழகாக, உறுதியாகத்தோன்றினும் உட்பக்கம் ஒடிந்து, உப்பால் அரிக்கப்பட்டிருப்பது போல இவ்வுடலும் நோயால், ஓயாத கவலையால் உளுத்துப் போவது இயற்கை. ஊற்றைச் சரீரத்தை உப்பிருந்த பாண்டத்தை என இவ்வுடம்பைப் பாடினர் பலர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பாட்டின் செவ்விநோக்கி செந்தமிழின் அருமையிட்டு எனப்பாடல் அமைந்துளது.

தாயுமான சுவாமிகள் மூவர்தமிழின் கனதியைப் பல இடங்களில் எடுத்தாண்டு என்தமிழ் அப்பெருமக்கள் தமிழுக்கு ஈடாகாதெனப் பாடியமை குறிப்பிடத்தக்கது.

**பாகத்தி னால்வீதை பாடிப்படிக்கவோ**
**பக்திநெறியில்லை வேத**
**பாராய ணப்பனுவல் மூவர் செய்பனுவலது**
**பகரவோ இசையும் இல்லை**

*சச்சிதானந்தசிவம் 3*

அர்ச்சனை பாட்டேயாதலின் சொற்றமிழ் பாடுக - என எம் பெருமானே சுந்தரர்க்கு ஆணையிட்டது மட்டு மன்றிப் பித்தா எனப்பாடு எனவும் கூறினார். திருவாரூர்த் தேவாசரிய மண்டபத்தில் அடியார் பெருமையைப் பாட "தில்லைவாழ் அந்தணர்" என அடியெடுத்தும் கொடுத்தார். ஆகவே ஆரூரர் பாடியது தெய்வத்தமிழேயாம். இந்த மேன்மையை அனுபவித்த தாயுமான சுவாமிகள் சுந்தரர் பெருமானை 'வித்தகத்தமிழ்ச் சமர்த்தர்' எனவியந்து போற்றியுள்ளார். சமர்த்தர் கெட்டிக்காரர், விண்ணர் சதுரப்பாடுடையவர்

**பித்தர் இறை என்று அறிந்து பேதைபால் தூதனுப்பு**
**வித்தகச் சமர்த்தர் தாள் வாரம் வைப்பது**
**எந்நாளோ**

*அடியார் வணக்கம் 3*

பேதைபால் - பரவை நாச்சியார் இடத்து, தமிழ்ச்சமர்த்தர் - தமிழிலே (தேவாரத்தில்) வல்லவராகிய சுந்தரமூர்த்தியடிகள் முருகப் பெருமானைப் பாடும் அருணகிரியாரும், பரவையாரிடம் தூது சென்ற சிவபெருமானது செல்வமகன் எனப்பாடியுள்ளார்.

**பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற**
**பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா**
**பகை யசுரர் சேனைகொன்று அமரர்சிறை**
**மீளவென்று**
**பழநி மலை மீதில் நின்ற பெருமாளே**

*(கருவினுருவாகி வந்து)*

எப்படிப் பாடினரோ அப்பருஞ்சுந்தரரும், ஆளுடைபிள்ளையும், அருள் மணிவாசகரும், இப்படிப்பாடலாமோ - எனப் போற்றுகின்றார். நால்வரையும் கவியோகி சுந்தானந்த பாரதியார். இப்பாவத்திலே இரு பாடல்களைத்

தாயுமானவர் வியந்து போற்றியுள்ளார்.

**தான் என்னை முன்படைத்தான் என்ற தக உரையை**
**நான் என்னா உண்மைபெற்று நாம் உணர்வது எந்நாளோ**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திரு நொடித்தான்மலை என்ற பதிகத்தில் ''தானென்னை முன் படைத்தான்'' என்று கட்டளையிட்ட தகுதியான திருப்பாட்டில் (பிராகிருத தேகத்தினையும் - சிவனையும் சிவதனுவாகவும் - சிவமாந்தன்மையாகவும் செய்து வலிய உருவ முத்தியினைப் பயப்பித்த) பொருளை அறிந்து சுதந்திரம் கொள்ளாத உண்மை நிலையைப் பெற்றுயாம் திருவருளுணர்வ தெந்நாளோ- நொடித்தான் மலை - அழித்தற் கடவுள் மலை.

**'என்னுடையதோழனுமாய்' என்ற திருப்பாட்டி னன் னெறியைக் கண்டுரிமை நாஞ் செய்வ தெந்நாளோ**
*மேலது 4*

சுந்தரர் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருவாரூர்ப் பதிகத்தில் ''என்னுடைய தோழனுமாய்'' என்று சொன்ன திருச்செய்யுளில் முதல்வன் சிவனடியார் இடத்தில் இருந்து உபகரிக்கும் நன்மார்க்கத்தைக் கண்டு சிவத்தொண்டு யாம் செய்வதெந்நாளோ.

மேற்படி கண்ணிகளில் எடுத்தாண்ட திருப்பாடல்கள் வருமாறு:-

**தானெனை முன்படைத் தான்அத றிந்துதன் பொன்னடிக்கே**
**நானென பாடலந் தோநாயி னேனைப் பொருட்படுத்து**
**வானெனை வந்துஎதிர் கொள்ளமத்த யானை அருள் புரிந்து**
**ஊனுயிர் வேறுசெய் தான் நொடித்தான்மலை உத்தமனே**
*திருமுறை 7 : 84 - 1*

நொடித்தல் - அழித்தல், நொடித்தான்மலை - அழிக்கும் தன்மை கொண்டான் உறையும் மலை. அழித்தற்கு உரியானே ஆக்கவும், காக்கவும் பெறும் பெற்றியுடையன். எனவே தனக்கு ஈறின்றியே நிற்கும் முதன்மைப் பொருளானவன் சிவபிரான். அவன் செம்மாந்து இருக்கும் மலை திருநொடித்தான் மலை எனப்படும் கைலாயமே!

ஒருதினம் சேரமான் பெருமான் (சுந்தரர் தோழர்) நீராடச் சென்றவேளை - தம்பிரான் தோழருக்கு (சுந்தரர்) திரு அஞ்சைக்களத்து நினைவு வரவே, அவரைவழி பாடியற்ற ஆலயம் சென்றார். திருக்கோயிலை அடைந்த நாவலூரரின் கண்களில் நீர் பொழிய காதலாகிக் கசிந்து நெஞ்சம் உருகி - நிலமிசைப் பன்முறைவீழ்ந்து வணங்கி எம்பெருமானே இப்பூமியின் வாழ்க்கையை வெறுத்தேன். நின் பாதங்களையே அடியேன் சேரவேண்டும் எனப் பதிகம் பாடத்துவங்கினார். சம்பந்தர் திருமுறையின் முதல் பாடல் தந்தவர். சுந்தரர் திருமுறையை முற்றுப் பெறச் செய்தவர். வெள்ளையானையேறி இறைவன் அனுப்பக் கைலை சேர்ந்த பெருமைக்குரியவர். எனவே மிகுசைவத்துறை சேர்ந்த பெருமைக்குரியவர் எனவே மிகுசைவத்துறை விளங்க வைத்த பெருமைக்குரிய செந்தமிழ் நாவலர் சுந்தரரே.

**ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி**
**மாழை ஒண்கண் பரவையைத்தந்து ஆண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே**

துரிசு - குற்றம், மாழை- மாவடு, மாம்பிஞ்சு, ஏழிசை, சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் (குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்)

பொழிப்புரை:-

ஏழிசையாய், இசையின் பயனாய், இன்னமுதாய், என் இனிய தோழனுமாய், யான்செய்யும் குற்றங்கட்கு உடன் பட்டு மாவடுவின் வகிர் போன்ற அழகிய கண்களையுடைய பாவை தனை எனக்குத் தந்த என் ஆரூர்ப் பெருமானை அறிவற்ற ஏழையேன் இன்னும் பிரிந்திருத்தல் முறையோ?

இறைவனை நண்பனாகக் கொண்ட சகமார்க்கமே சுந்தரர் கண்ட பாதை. இவர் தந்த திருமுறை ஏழாந்திருமுறை. 84 பதிகங்கள் 1025 பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. சுந்தரர் போற்றிய தமிழ்ப் பிரயோகங்களை இனிக்காண்பாம்.

மன்னு நாவல்ஆ ரூரன்வன் தொண்டன்
ஒலிகொள் இன்னிசைச் செந்தமிழ்பத்தும்
உள்ளத்தால் உகந்து ஏத்தவல்லார் போய்
மெலிவில் வானுலகத்தவர் ஏத்த
விரும்பி விண்ணுலகு எய்துவர் தாமே
*திருமுறை 7 : 9 - 11*

நாவலூரன்வன் தொண்டன் நற்றமிழ்
பாதம் ஓத வல்லார் பரனோடு கூடுவரே
*மேல் 7 : 13 - 10*

ஆரூரன் அருந்தமிழ் ஐந் தினோடு ஐந்து
அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்
சீரூர் தருதே வர்கணங் களொடும்
இணங்கிச் சிவலோகம் எய்துவரே .
*திருமுறை 7 : 16 - 11*

சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத்து இருப்பரே
*மேல் 7 : 22 - 10*

வாழ வல்லவன் தொண்டன்
வண்தமிழ் மாலைவல் லார்போய்
ஏழு மாபிறப்பு அற்று
எம்மையும் ஆளுடை யாரே
*மேல் 7 : 23 - 10*

வெஞ்சமாக்கடல் விகிர்தா அடியே
னையும் வேண்டுதியே என்று நான்விரும்பி
வஞ்சியாது அளிக்கும் வயல்நாவ லர்கோன்
வனப்பகை யப்பன் வன்தொண்டன் சொன்ன
செஞ்சொல் தமிழ்மா லைகள் பத்தும் வல்லார்
சிவலோ கத்திருப் பதுதிண்ணமன்றோ
*திருமுறை 7 : 27 - 10*

நாடிய இன்தமிழால் நாவல வூரன் சொல்
பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே
*மேல் 7 : 30 - 10*

.................... நாவல் ஆரூரன்
உரிமையால் உரை செய்த ஒண்தமிழ்கள் வல்லார்
வரைபினார் வகைஞாலம் ஆண்டவர்க்கும் தாம் போய்
வாளவர்க்குத் தலைவராய் நிற்பவர்தாமே
*மேல் 7 : 36 - 11*

ஆரூ ரன்அடியான் அடித்தொண்டன் உரைத்த தமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத்து இருப்பரே
*மேல் 7 : 41 - 10*

ஆரூரன் உரைத்த உறுதமிழ் பத்தும் வல்லார்
வினை போய்ப்
பாரும் விசும்பும் தொழப்பர மன்னடி கூடுவரே
*திருமுறை 7 : 45 - 11*

உளங்குளிர் தமிழ்மாலை 48 - 10, பன்னுதமிழ் நூல்மாலை வல்லார் 53 - 10 ஆரூரன் சொன்ன பாவணத்தமிழ் பத்தும் 55 - 10 சீரூர் செந்தமிழ்கள் 58 - 10 ஊரன் உரைசெய்த பாவின் தமிழ் வல்லார் 60 - 10 ஆரூரன் தமிழ் வல்லார் 63 - 11 நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லார் 64 - 11 ஆரூரன் உரைத்தன நற்றமிழின் மிகுமாலை 66 : 10 இவ்வாறு இறைவனைத் தமிழ் செய்த திருமுறைகளை விலக்கிக் கோயில் நடத்துனரும் பக்தர்களும் சிந்திப்போம் அவன் தமிழ்பாடி அருள் பெறுவோம்.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம்

வில்வத் தொண்டர் சாரமா முனிவர்
மலைக்கோட்டை- திருச்சி

**வீண் ஆளும் தேவர்க்கும் மேலாய வேதியனை**
**மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்**
**தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானைப்**
**பெண் ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்**
**கண் ஆர் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட**
**அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்!**
*(எட்டாம் திருமுறை)*

சைவ சமய குரவர்களாலும், அவர்கள் வழிவந்த அருளாளர்களாலும் அருளிச் செய்யப் பெற்றவை திருமுறைகளாகும். சைவ சித்தாந்தப் பெருநெறியை விளக்குதற்குள்ள மெய் கண்ட நூல்கள் பலவற்றிற்கும் இத்திருமுறைகளே மூலமாய் அமைந்துள்ளன. திருமுறைகளில் அருளுணர்வு மீதூரப்பட்டிருப்பதோடு வாழ்க்கைக்கு வேண்டிய அறநெறிகள் பலவும் ஆங்காங்கே மிளிர்கின்றன. அன்றியும் இத்திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாம் திருமுறை எனப்போற்றப்படும் திருவாசகம் தேனினும் இனியதாகும். ''நமச்சிவாய வாழ்க" என்னும் அரிய மந்திரத்தைத் தொடக்கமாகக் கொண்டது திருவாசகம். யாவர்க்கும் ஊதியம் திருவைந் தெழுத்தும் அதன் பொருளாக விளங்கும் கூத்தப்பெருமானுமே! வருணனை முதலிய இன்றி முழுமையாக இறைவனையே போற்றும் தனிச்சிறப்பு திருவாசகத்திற்கு உரியது. இத்தகைய ஞானத்திருமுறையை அனைவரும் ஓதி அருள் நலம் பெறவேண்டும்.

சைவசமயத்திற்கு உயிர் நாடியாக விளங்குவது திருவாசகம். கருங்கல் மனத்தையும் உருக்கவல்ல திருவாசகத்திற்கு அறிஞர்கள் பலர் உரை எழுதியுள்ளார்கள். திருவாசகத்தின் பெருமை அளவிடத்தக்கது. ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின்" என்னும் அடிகளையும் சிந்தித்துப் பார்க்கவேண்டுகிறேன்.

தமிழ்மறையாய், எட்டாந்திருமுறையாய், சிகாமந்திரமாய், சிவானுபவச்செல்வமாய், தெவிட்டாத இன்ப அமுதாய் விளங்குவது திருவாசகம். இதனை ஓதுவார்க்குப் பிறவித்துன்பம் நீங்கி சிவப்பேறு சித்திக்கும். இத்திருவாசகத்தை உள்ளங்குழைந்து ஓதுவார் எண்ணில்லாத அருள்நலங்களைப் பெறுவர்.

திருவாசகத்தில் முதலில் விளங்குவது சிவபுராணம். இது எல்லையில்லாத பெருமை உடையது. நூற்றியெட்டு உபநிஷத சாரமாக விளங்குவது.

''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார்" என்று கூறியிருப்பதனால் பொருள் தெரிந்து பாராயணஞ்செய்தல் சாலப்பயனுடையது. சிவானுபவம் பெற்றவர்க்கே இது தெற்றென விளங்குஞ் சீருடையது.

இத்திருவாசகம் மனிதன் சொல்ல தெய்வம் எழுதியது. மாணிக்கவாசக சுவாமிகள் தில்லைச் சிதம்பரத்தில் ஈசான மூலையில் பன்னசாலை அமைத்து அதில் தவநிலையில் இருந்தார். அதுசமயம் தில்லைக் கூத்தப்பெருமான் அந்தணர்

வடிவம் கொண்டு மாணிக்கவாசகரிடம் சென்று 'நான் பாண்டிய நாட்டிலிருந்து வருகிறேன். நீ திருவாசகம் பாடியதைக் கேள்விப்பட்டு இங்கு வந்துள்ளேன்' என்றார். அதைக் கேட்ட மாணிக்கவாசக சுவாமிகள் மதுரையம்பதியிலே தாம் அமைச்சராக இருந்தபடியால் அங்கிருந்து வந்திருக்கிறார் என்று மனமகிழ்ச்சியோடு சந்தோஷப்பட்டார், பின்பு கூத்தப்பெருமான் திருவாசகத்தைப் பாடும்படியாகப் பணித்தார். திருவாசகம் முழுவதையும் மாணிக்கவாசகர் சொல்லக் கூத்தப்பெருமான் எழுதிக்கொண்டார். திருவாசகம் முடிந்தபின் அத்திருவாசகத்தில் திருவெம்பாவை என்ற பாடலின் உயர்வு காட்டி ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என்று சொல்லத் திருக்கோவையாரைப் பாடச்செய்து அதையும் எழுதிக்கொண்டார். எழுதி முடித்தபின் தானே கையொப்பமிட்டு பஞ்சாக்கரப்படியில் வைத்துவிட்டார். ''இத்திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகமாட்டார்." உருகாதவர் மனம் கருங்கல்லுக்கு ஒப்பாகும். திருவாசகம் என்னும் தேன் என்று சொன்னார்கள். தேன் தானும் கெடாது தன்னை சார்ந்த பொருள்களையும் கெட்டுப்போகவிடாது. சித்த மருத்துவத்தில் நோயாளிக்கு மருந்து கொடுக்கும் போது அம்மருந்தை தேனில் குழைத்துச் சாப்பிடு என்று சொல்லுவார்கள். கொடுக்கும் மருந்தில் குற்றம் இருந்தாலும் தேன் அதைப் புனிதமாக்கிவிடும். அதுபோல் தேனாகப்பட்ட திருவாசகத்தை நாள்தோறும் நாம் பொருள் உணர்ந்து பாடுவோமாகில் நம் இதய கமலத்தில் தேனாய், இன் அமுதமாய் இருந்து தித்திப்பான் சிவபெருமான்.

ஒரு அன்பர் ஒரு அறிஞனிடம் சென்று இத்திருவாசகத்திற்கு உரை எழுதிக் கொடுக்குமாறு கேட்டார். அந்த அறிஞர் "திருவாசகத்திற்கு உரை எழுதச்சொன்னால் நான் காவிரியில் விழுந்து இறந்துவிடுவேன் என்று சொன்னார். என் அப்படி சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஏனெனில் இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதவனாக இருக்கிறான் இறைவன், இடைவெளி இருந்தால் தானே எழுத முடியும். என் நெஞ்சைவிட்டு நீங்காமல் இருப்பவரை நான் சிற்றறிவு உடையவன் எப்படி எழுதமுடியும்?" என்றார். அத்தகைய பெருமை உடையது திருவாசகம். இத்திருவாசகத்திற்கு எவ்வளவு அறிஞர்கள் உரை எழுதினாலும் முழுமையாக எழுதமுடியாது. ஏனெனில் கூத்தப்பெருமானே கையால் எழுதிய அருள்நிறைந்த மேலான திருவாசகம். இத்திருவாசகம் படிப்பவர்கள் உள்ளத்தில் ஆன்மாக்களின் சிந்தையில் அநாதியே தங்கி உள்ள ஆணவ மலமாகிய அக இருளை அகற்றவல்லது. படிக்கும் தோறும் மனித இனத்தை உயர்த்தி உய்விப்பது. பிறவிப் பெருங்கடலுக்குத் தோணியானது. மனத்திரட்சிக்கு ஆணியனையது. சிவகதிக்கும் ஏற்றும் ஏணியானது. அத்தகைய பெருமை உடையது திருவாசகம். இதனை அன்புடன் ஓதுவார்க்கு உள்ளம் உருகும். நாடி நரம்புகள் உருகும், என்பு உருகும், உயிர்க்கு உயிராகிய சிவம் உருகும்.

*வாழ்க உலகமெல்லாம்!*

*திருச்சிற்றம்பலம்*

**பஞ்ச தாண்டவ சிறப்பு தலங்கள்**

| | | |
|---|---|---|
| 1. ஆனந்த தாண்டவம் | - | தில்லை, பேரூர் |
| 2. அஜபா தாண்டவம் | - | திருவாரூர் |
| 3. சுந்தர தாண்டவம் | - | மதுரை |
| 4. ஊர்த்துவ தாண்டவம் | - | அவிநாசி |
| 5. பிரம்ம தாண்டவம் | - | திருமுருகன் பூண்டி |

# சைவ வாழ்க்கை

சு. சிவபாதசுந்தரம் B.A

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும் போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும் போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். கள்ளுணவை விரும்புகின்றவன், அதைப் பருகும் போது இன்புறுகின்றான். அன்றியும் நாம் விரும்ப மாட்டாத ஒன்று நம்மைச் சேராவிட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான்.

இப்படியின்றி, நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும்பாதது வந்து சேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்தவர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டாகின்றது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

அதுபோல, நமக்கு ஆகாத பொருள்களை நாம் விரும்புதல் உண்டு. வைத்தியநாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்கு கிடையாவிடின், அது நமக்கு ஆகாதென்று உணர்ந்து அது கிடையாமற் போனதைப் பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்பமாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கின்றான். ஆமணக்கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கின்றான். பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான். அதுபோல, சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்ப மாட்டாதவற்றை நமக்குச் சேர்த்தலும், கொடிய வேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவமாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால் நம் முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும் நம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காக கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போனதும் சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும் கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். அதுபோலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாவிடில் துன்பமில்லை, எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை, என் குழந்தை இறந்து போம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலு மேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவ மென்னும் வியாதியினாலே பீடிக்கப்பட்டிருக்கின்றோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவபெருமான் ஆதலால் அவருக்கு "வைத்தியநாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்கப் போனதும் நன்மையானவைகளே, அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும். என்பதை நாம் அறியவேண்டியதில்லை. யாவும் அவருடைய செயலே, அவர் செய்வதெல்லாம் நன்மையே என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

**'நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை**

தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற்
சங்கவெண் குழையோர்காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே'

'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முரண் ஏறும்
கலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை.
- தேவாரம் -

என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் ஆகிய மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெரு முயற்சி செய்து பொருளைத் தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர் செய்ய வரும் போது கோபம் கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும் குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலின்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் பிறந்தவர் இறக்கை திண்ணம் என்பதைக் கண்டு மனங் கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

# உமேசர்

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

அகரம் உகரம் மகரமாய் நிற்கும் பிரணவமானது எழுத்து மாறுதலினால், உகரம் மகரம் அகரமாகித் தீர்க்கப் புலுதமுமாய்த் தேவிக்குமாம், என்று லிங்க புராணம் கூறுகின்றது. உமாதேவியார் சிவபெருமானது திருவருளே, சிவபெருமானே எல்லாவற்றையும் படைத்துக்காக்கும் வண்ணம் தாமோர் பெண்ணுருக்கொண்டு விளங்குவார். அங்கம், பிரத்தியங்கம், சாங்கம் உபாங்கமாக எங்கும் காணப்படும் வடிவமெல்லாம் சத்தியே. அந்தந்த வடிவச் சத்திமயமாகி நிற்பவர் சிவபெருமானாகும். இதனை வேதாகமங்கள் சொல்லும்.

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்.

மாதுமை வசத்தனாகி மருவு வானென்றியன்னா
னுதனதருலே யெல்லா நண்ணுவித்தருளும் வண்ணம்
பேதமதா கித்தானோர் பெண்ணுருக்கொண்டு மேவும்
என்பதனாலறிக இச்சரித்திரத்தின் உண்மைக் கருத்தை,

மாணிக்கவாசக சுவாமிகள்

தென்பாலு கந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும் பித்தன் காணேடீ
பெண்பாலுகந் திலனேற் பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோ கெய்திவீடுவர் காண் சாழலோ

சிவபெருமான் தேவர்களுடைய வேண்டுதலுக்கிரங்கிச் சிருட்டித் தொழில் நிறைவேறுதற்காகவும், உயிர்களுக்குப் போகத்தையூட்டுவதற்காகவும் தமது திருவருளைச் சத்தியாக்கி இடப்பாகத்தில் இருத்தினமையால் உமா மகேசுர மூர்த்தியாயினர்.

# நைவேத்திய விதி பரிசாரக லஷணம்

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்

பாகஞ் செய்யும் பரிசாரகர்கள் சிவதீஷை பெற்றவர்களாய், ஸ்நானஞ் செய்து தோய்த் துலர்ந்த வஸ்திரங்களைத் தரித்தவர்களாய், வீபூதி, ருத்திராஷமணிந்து அனுட்டானம் பண்ணியவர்களாய் இருத்தல் வேண்டும்.

### பாகலஷணம்

பாத்திரத்தில் அரிசியைவிட்டு வடித்தெடுத்த சலத்தை அவ்வரிசிக்கு ஒன்றரைக்கூறு அப்பாத்திரத்தில் வார்த்து வார்த்து அங்கமந்திரங்களினால் ஆறுதரம் கழுவிக்கழுவி, சத்தியோசாத மந்திரத்தினால் கழுநீரை யூற்றிவிட்டு இருதயத்தினால் கல்வாரி அரிசியினிருமடங்கு சலம் பூரித்துக் கவசத்தினால் மூடிப் பின்பு கோமயத்தினால் மெழுகப்பட்ட மடைப்பள்ளியிலே தரும அதர்மரூபமாகிய இரண்டு கைகளையுடைய அடுப்பை அரிசி கொண்டு இருதயத்தினால் அருச்சித்து, பின்பு அப்பாத்திரத்தை வாமதேவத்தினால் எடுத்து இருதயத்தினால் அடுப்பின் மேல் வைத்து அகோரத்தினால் அக்கினியிட்டு, தற்புருஷத்தினால் புழுக்கள் பூச்சிகள் எலும்புகள் இல்லாதனவும் பொறி பறவாதனவுமாகிய விறகுகளிலே குழலைக் கொண்டேனும், தருப்பைப்புல்லைக் கொண்டேனும் வாயுவை உண்டுபண்ணி அக்கினியை எரியச் செய்து மயிர், உமி முதலியனவைகள் கூடாமலும் அபக்குவம் அதிபக்குவம் ஆகாமலும் வேறு நிறமும் துர்க்கந்தமும் வராமலும் நன்றாகச் சமைத்து இருதயத்தினால் இறக்கி முக்காலியில் வைத்து அன்னத்திநடுவே இருதயத்தினால் ஒரு பாத்திரம் வைத்து பாத்திரத்தின் கழுத்தடியிலே நான்கு திக்கிலும் தத்புருஷ முதலிய நான்கு மந்திரங்களினாலும் விபூதி சாத்துக. இவ்வாறு காமிகம் காரணம் முதலிய ஆகமங்களிற் கூறப்பட்டது.

புகை மணமுள்ளதும் குழைந்ததும் குளிர்ந்ததும் மயிர் புழுவுள்ளதும் பழையதுமாகிய அன்னத்தை நீக்க வேண்டும்.

நைவேத்தியத்தில் உமியிருந்தால் வறுமையும் கல்லுக்கிடந்தால் வியாதியும் மயிர்கிடந்தால் வறுமையும் வருமென்று சந்தானசங்கிதை கூறுகின்றது. நைவேத்தியம் பண்ணும் அன்னத்தில் மயிர் இருந்தால் மரணமும் புழு இருந்தால் பகைவராற் பீடையும், கல்லிருந்தால் பயிரழிவும், உமியிருந்தால் கிராமத்துக்குக் கேடும், ஊரியிருந்தால் சுரபீடையும், அதிகபக்குவ மானால் வறுமையும், பக்குவமில்லாதிருந்தால் பிரசைகளுக்குக் கேடும் உண்டாம். ஆறிய சாதமானாற் பொருளழிவும் அதிக சூடுடனிருந் தால் துக்கமும், கருகலாயிருந்தால் சகல நாசமுமுண்டாமென்று காரணாகமம் பகரும்.

### தண்டுலவிசிஷ்டம்

நைவேத்தியத்திற்குப் பொற்சம்பா, முத்துச் சம்பா, வெண்சம்பா, செஞ்சம்பா, பரிமளசம்பா அரிசி உத்தமமாம். வைணவம், நீவாரம் மத்திமமாம். பன்றி நெல் அரிசி முதலியவை அதமமாம். இவ்வாறு காமிகாமம் முதலிய வற்றிற் சொல்லப்பட்டது.

### அன்னவகைகள்

சுத்தான்னம், மத்வன்னம், தெதியன்னம், பாயசான்னம், கிருசரான்னம் குளான்னம், முற்கான்னம் என அன்னம் ஏழுவகைப்படும்.

வேறு பொருள்கள் சேராது தனியே பாகம் பண்ணப்பட்டது சுத்தான்னமாம்.

(நீவாரம் - விதைக்காமல் முளைத்தது.)
தேன்வார்த்துப் பிசறிய அன்னம் மத்து வன்னமாம். மது- தேன்
தயிர் வார்த்துச் சேர்க்கப்பட்ட அன்னம் தத்தியன்னமாம். தெதி - தயிர்.

அரிசியிற் பாதி அல்லது அதிற் பாதி பயற்றம்பருப்பும் அரிசியினிருமடங்கு பசுப்பாலும் சர்க்கரையுங் கூட்டிப் பாகம் பண்ணப்பட்டது பாயசான்னம்.

அரிசியிற் பாதியாவது அதிற்பாதியாவது அதிற்பாதியாவது எள்ளுப் பொடியும், எள்ளுப் பொடியிற் பாதி நெய்யுமாகப் பிசறிய அன்னம் கிருசரான்னமாம். கிருசரம் - எள்ளு

அரிசியிற் பாதி வெல்லமும், அரிசியிற் பாதி பசுப்பாலும், அதிற்பாதி நெய்யுமாகக் கூட்டிப் பாகம் பண்ணப்பட்டது குளான்னமாம். குளம் - சருக்கரை

அரிசியிற் பாதி அல்லது அதிற் பாதி சிறுபயறும் தேங்காய்த் துருவலும் சருக்கரையும் சேர்த்துப் பாகம் பண்ணப்பட்டது. முற்கான்னமாம். முற்கம் - பயறு.

இனி முற்கான்னம் சர்ஷபான்னம், மாஷான்னம், ஆமிலான்னம் திலான்னம் என அன்னம் ஐவகைப்படுமெனவும் ஆகமம் கூறும். சர்ஷபம் - கடுகு, மாஷம் - உழுந்து, ஆமிலம் - புளி

### நைவேத்தியம் செய்யும் முறை

பொன், வெள்ளி, தாமிரம் என்னுமிவற்றால் அமைந்த பாத்திரங்களிலாவது வாழையிலை யிலாவது சுத்த வெண்கலப் பாத்திரத்திலாவது அன்னத்தைப் படைத்து நிவேதிக்க என்று மகுடாகமம் கூறுகின்றது. நைவேத்தியம் செய்வதற்கு நெய்யுடன் கூடிய அன்னமே ஏற்றதாகும். ஆம்சுமான் ஆகமம் “நெய் இல்லாத அன்னம் அசுரப்பிரீதியாகின்றது. ஆதலின் எவ்வகை முயற்சியினா லாவது நெய்யுடன் கூடிய அன்னத்தை நிவேதிக்க” என்று செப்புகின்றது.

அன்னம் முதலியவற்றைத் தனித்தனியே ஐந்து பாத்திரங்களிற் படைத்துச் சதாசிவ மூர்த்தியினுடைய ஐந்து திருமுகங்களிலும் நிவேதனம் பண்ணுக. அது கூடாதாயின் ஒரே பாத்திரத்திற் படைத்துத் தற்புருஷமுகத்தில் மிருகமுத்திரையினாலே நிவேதிக்க, அதுவும் சிவனுக்குப் பிரீதியாம்.

### சைவ சமய நெறி

**பஞ்சான னந்தனினும் பாங்குறப்போ னங்கொடுக்க**
**பஞ்சகசெம் பொற் பாத்திரத்து**
**தற்புருட வந்திரத்திற் றானேநை வேத்தியமு**
**மற்புதனுக் காமென் றறி.**

வாசுகியின் முகங்களைந்தினுள் ஒரு முகத்திற் பருகின் மற்றவைகளுக்கும் திருத்தியாகு மாறுபோலத் தற்புருஷ முகத்தில் நிவேதித்தது மற்றவைகளுக்கும் நிவேதித்த தாகும்.

தற்புருஷவத்திரம் கன்மசாதாக்கியம். ஆதலால் நைவேத்தியம் முதலிய உபசாரங்கள் எல்லாவற்றையும் கன்மசாதாக்கியத்திற்றானே செய்க. இக் கன்மசாதாக்

(சைவசமய நெறி பொது - காரணாகமம்.
பஞ்சசாதாக்கியங்களுள்ளே சிவசாதாக்கியம் ஈசானத்தும், அமூர்த்தி சாதாக்கியம்

சத்தியோசாதத்தும், மூர்த்திசாதாக்கியம், வாமதேத்துவம், கர்த்திருசாதாக்கியம் அகோரத்தும், கருமசாதாக்கியம் தற்புருடத்தும் பொருந்துதலானும் சாதாக்கியமைந்தும் ஒன்றாய்த் திரண்ட அவதாரம் கருமசாதாக்கிய மாதலானும் தற்புருஷமே சிறப்புடைத்து. ஆதலால் தற்புருஷமுகத்தில் நிவேதித்தல் உத்தமமாயிற்று. அது,)

கியத்திற் செய்தன வெல்லாம் மற்றைச் சாதாக்கியங்களிலும் செய்தனவேயாகும். சதாசிவ மூர்த்திக்குத் தற்புருஷம் முகம் ஆகையால் அம்முகத்தில் நிவேதிக்க வேண்டுமென்று வாதுளாகமத்திலும் காணப்படுகின்றமையாலும் அம்முகத்தில் நிவேதிக்க.

**கன்மசாதாக்கியங் காண்டற் புருடமாதலினாற்**
**கன்மஞ் செய் கன்மத்தின் கண்**
**வத்திரமாந் தற்புருட மாதேவற் காதலினவ்**
**வத்திரத்தி னூட்டல் வழக்கு.**

இவ்வாறன்றி ஈசானவத்திரம் சிவாகமங்களிருபத் தெட்டுந் தோன்றிய மேன்முகமாதலால் அம்முகத்தில் நிவேதித்தலே உத்தமமென்று சில ஆகமம் கூறும்.

**கன்மசாதாக்கியங் காண் கருதிடிற் புருடமெங்கு**
**மன்னபானாதியந்த முகந்தனிற் கொடுக்கவன்பா**
**லுன்னிடினகோரங் கர்த்தா மூர்த்தமே யுணரிற்சாத**
**மன்னிய மூர்த்தம் வாம மதித்திடிற் சிவமீசானம்**

என்னுஞ் செய்யுளாலறிக. வாதுளாகம முமிங்ஙனமே கூறும்.

சில நூல்களில் கரும சாதாக்கியம் தற்புருஷத்தும், கர்த்திருசாதாக்கியம் அகோரத்தும், மூர்த்திசாதாக்கியம் சத்தியோசாதத்தும் அமூர்த்திசாதாக்கியம் வாமதேவத்தும் சிவசாதாக்கியம் ஈசானமுகத்தும் பொருந்துமெனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகமபேதமெனக் கொள்ளப்படும்.

*சைவசமய நெறி*

**கன்மம்புருடங் கருத்தாவ சோரமேற்**
**குன்னுங்கான் மூர்த்த முறும்**
**வாமமூர்த்தமே யீசான வத்திரத்தி**
**னாமஞ் சிவமென்றே நாடு.**

நைவேத்தியத்திற்கு எவ்வளவு அரிசி கற்பிக்கப்பட்டதோ அவ்வளவாயிரம் வருஷம் அப்பணியைச் செய்தவர்கள் சிவலோகத்தி லிருப்பார்கள் எனக் காமிகம் கூறும்.

விளாம்பழத்தினுடைய சாரத்தை யானை எப்படிப் புசிக்கின்றதோ, அப்படியே தேவர்கள் மந்திரத்துடன் நிவேதிக்கப்பட்ட பொருள்களை ஏற்கின்றார்கள்.

மனவமைவு பிறத்தற்காகத் தற்போதத்தை நைவேத்தியமாக ஒப்பித்தலே இதன் பாவனையாகும்.

*சதாசிவ ரூபம்*

**பின்மன அமைவுபிறத்தற் பொருட்டு**
**நைவேத்திய முகவாசமு நல்கி**

*திருவிளையாடற் புராணம்*

**பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ**
**ராட்டிச் சொன் மலரணிந்து தற்போத வின்னமுதை**
**ஊட்டித் தற்பரஞானமா மோமவெங்கனலை**
**மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சியரானார்.**

# சந்தேகம் தெளிதல்

கேள்வி : "அல்லகண்டம் கொண்டடியேன்" என்று வரும் அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் அல்லகண்டம் என்பதின் பொருள் யாது? (வே. பரமநாதன் - கனடா-)

பதில் : திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த "எத்தாயர் எத்தந்தை" என்ற தேவாரத்து "அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால் அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே என்ற அடியிலமைந்த" "அல்லகண்டம்" என்ற சொற்றொடருக்கு அல்ல என்பதை அல்லல் என்ற சொல்லின் இறுதி எழுத்துத் தொக்க சொல்லாகவும், கண்டம் என்ற சொல்லை உடம்பு என்ற பொருளைத் தருவதாகவும் கொண்டு துன்பத்தைத் தருகின்ற உடம்பு என்று பொருள் காண்பவர் உளர்.

அங்ஙனம் பொருள் கொண்டால் "அத்தா" எனத் தொடங்கும் அவ்வடிக்கு அப்பனே உனது பொன் போன்ற பாதத்தை அடியவனாகிய நான் அடைந்தேனாகில், துன்பத்தைத் தருகின்ற இந்த உடம்பைக் கொண்டு என்ன யெ்வேன் என்று இரங்குவதாகப் பொருள் உரைக்க வேண்டும். அங்ஙனம் உரைத்தல் பொருந்துவதாக இல்லை.

உடம்பின் பயன் இறைவன் திருவடியைச் சேர உதவுதல் அப்பயன் பெற்ற பின் உடம்பைப் பற்றி எண்ணி இரங்குவதற்கு இடமில்லை. கரும்பை நெரித்துச்சாறு கொண்டவர், அதன் சக்கையை எண்ணி இரங்குவதில்லை.

ஆதலால் "அல்லகண்டம்" என்பதற்கு வேறு பொருள் கொள்ளல் வேண்டும். அல்ல என்ற சொல்லை அல்லது என்ற சொல்லின் இறுதி எழுத்துத் தொக்க சொல்லாகவும் கண்டம் என்ற சொல்லைப் பிரிவு என்ற பொருளைத் தருவதாகவும் கொண்டு "அல்லகண்டம்" என்ற சொற்றொடருக்கு அல்லது பிரிந்து நின்று என்று பொருள் கொள்ளலாம் போலும்.

அங்ஙனம் பொருள் கொண்டால் அவ்வடி அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றாலல்லது. அவ்வடியைப் பிரிந்து நின்று நான் என்ன செய்வேன் என்று இரங்குவதாகப் பொருள்படும். அப்பொருள் இறைவன் திருவடியைச் சேர்தலின் இன்றியமையாமையையும் அவ்வடியைச் சேராது பிரிந்து நிற்றலின் இழிவையும் விளக்கி இரங்குவதற்குக் காரணம் காட்டிச் சிறக்கும்.

திருச்சிற்றம்பலம்

**எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தா**
**ரெம்மாடு சும்மாடா மேவர் நல்லார்**
**செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லைச்**
**சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்**
**சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்**
**திருவானைக் காவுடைய செல்வா வென்றன்**
**அத்தாவுன் பொற்பாதமடையப் பெற்றா**
**லல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே**

திருச்சிற்றம்பலம்

- திருநாவுக்கரசர் -

உ
சிவமயம்

# நினைவிற் கொள்வதற்கு

| | | | |
|---|---|---|---|
| 01. | 14.04.2006 | வெள்ளி | வருடப்பிறப்பு |
| 04. | 17.04.2006 | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி |
| 08. | 21.04.2006 | வெள்ளி | நடேசரபிஷேகம் |
| 10. | 23.04.2006 | ஞாயிறு | திருநாவுக்கரசர் குருபூசை |
| 12. | 25.04.2006 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 14. | 27.04.2006 | வியாழன் | அமாவாசை விரதம் |
| 15. | 28.04.2006 | வெள்ளி | சித்திரைப்பரணி, சிறுத் தொண்டர் குருபூசை |
| 16. | 29.04.2006 | சனி | கார்த்திகை விரதம் |
| 17. | 30.04.2006 | ஞாயிறு | மங்கையற்கரசி குருபூசை |
| 18. | 01.05.2006 | திங்கள் | சதுர்த்திவிரதம் |
| 19. | 02.05.2006 | செவ்வாய் | விறன்மிண்டர் குருபூசை |
| 20. | 03.05.2006 | புதன் | ஷஷ்டி |
| 27. | 10.05.2006 | புதன் | பிரதோஷவிரதம் |
| 28. | 11.05.2006 | வியாழன் | சித்திரைச் சித்திரை, இசைஞானியர் குருபூசை |
| 29. | 12.05.2006 | வெள்ளி | சித்திராப்பூரணை விரதம், சித்ரகுப்த விரதம், திருக்குறிப்புத் தொண்டர் குருபூசை |

தனம்தரும் கல்வீ தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே.

-அபிராமி அந்தாதி-

Registered as a News Paper at the G.P.O.

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

- திருவாதவூரடிகள் புரானம் - 550/=
  (ம.க. வேற்பிள்ளை அவர்களின் விருத்தியுடன்)
- விதியை வெல்வது எப்படி? - 50/=
- திருவாசகம் - 100/=
- Understanding Saiva Siddhanta Philosophy- 100/=
- And Outline of Saivism - 150/=
- சைவத்தை அறியுங்கள் - 200/=
- சிவபுராணம் விளக்கவுரை - 50/=
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம் - 150/=
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு - 50/=
  (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு. கந்தையா - 75/=
- ஈழத்து சித்த சிரோமணிகள் - 75/=
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம் - 100/=
- சைவபோதம் 1ஆம் புத்தகம் - 75/=
- சைவபோதம் 2ஆம் புத்தகம் - 75/=
- சைவ மகத்துவம் - 75/=
- சைவசமய சாரம் - 75/=
- கந்தபுரான விளக்கம் - 150/=
- சிவஞான போதமும் கருத்துரையும் - 100/=
  (ஒரு கிறிஸ்தவ ஆய்வாளருக்கான மறுப்புரையும்)
- சுப்பிரமணியப் பெருமானுடை திருப்பெரு வடிவம் - 75/=
- சைவசமய நெறி - 275/=
  (மூலமும் உரையும்)
- சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள் - 175/=
- முப்பொருள் விளக்கம் - 275/=
- திருவாசகத் தேன் துளிகள் - 14/=

ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு

கிடைக்கும் இடம் :
**லசஷ்மி அச்சகம்**
இல. 195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.


எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு ,
கொழும்பு – 13. தொ.பே : 2478885


## சைவநீதி மாத இதழ்
### பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்பவேண்டிய முகவரி


***C. Navaneethakumar,***
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*


Regd No. QD/65/News 2006 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.